# இளைமையில் சிந்திக்க வேண்டியவை

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# இளமையில் சிந்திக்க வேண்டியவை

பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | இளமையும் அழகும்நிலையானவை அல்ல | 1 |
| 2. | இளமை, அனுபவ அறிவு இல்லாத பருவம் | 4 |
| 3. | எனக்கும் முதுமை வரும் | 8 |
| 4. | எனக்கும் வியாதி வரும் | 11 |
| 5. | எனக்கும் மாறுதல்கள் வரும் | 14 |
| 6. | பாதசாராவின் கதை | 16 |
| 7. | இளமையிலும், முதுமையிலும், அடுத்த உலகிலும் இன்புறுவோர் | 23 |
| 8. | இளமையில் இன்புற்று, முதுமையிலும்,அடுத்த உலகிலும் துன்புறுவோர் | 29 |
| 9. | இளமையில் துன்புற்று, முதுமையிலும்,அடுத்த உலகிலும் இன்புறுவோர் | 38 |
| 10. | இளமையிலும், முதுமையிலும், அடுத்த உலகிலும் துன்புறுவோர் | 45 |
| 11. | முதுமையும் மரண பயமும் | 54 |
| 12. | தேவதூதர்கள் | 57 |

1

# இளமையும் அழகும் நிலையானவை அல்ல

**ராணி கேமாவின் கதை**

பிம்பிசாரர் மகத நாட்டு மன்னர். பகவான் புத்தரிடம் மிகவும் பக்தி கொண்டவர். அவர் பகவான் புத்தரை தம் நாட்டுக்கு அழைத்து, மடம் அமைத்துக் கொடுத்து, தமக்கும் தம் நாட்டு மக்களுக்கும் தர்ம உபதேசம் செய்யும்படி வேண்டிக் கொண்டார். பகவான் புத்தரும், பிம்பிசார மன்னரின் வேண்டுகோளை ஏற்று, மகத நாட்டில் சில காலம் தங்கியிருந்து, தர்ம உபதேசங்களைச் செய்து வந்தார்.

பிம்பிசார மன்னரின் மனைவி ராணி கேமா. ராணி கேமா அழகிற் சிறந்தவள். பார்ப்போரெல்லாம் ராணியின் அழகைப் புகழ்ந்துரைத்தனர். தன் உடல் அழகில் மயங்கிய ராணி கேமா, அழகும் இளமையும் நிலையானவை அல்ல என்பதை மறந்துவிட்டாள். ஆடை ஆபரணங்களால் தன்னை அலங்கரித்துத் தன் அழகைப் பார்த்துப் பார்த்து ரசித்தாள். தன் அழகிற்கு நிகர் எவருமில்லை எனப் பெருமையும் கர்வமும் கொண்டாள்.

பிம்பிசார மன்னர் பகவான் புத்தரிடம் சென்று தர்ம உபதேசம் பெற்று வந்த போதிலும், ராணி கேமா அவ்வாறு சென்று உபதேசத்தைக் கேட்பதில்லை. "புற அழகு அழகல்ல; அக அழகே மனிதர்களை அழகுபடுத்தும்" எனப் பகவான் புத்தர் உபதேசம் செய்ததால், கேமா அங்குப் போகத் தயங்கினாள். அங்குச் சென்றால், பகவான் புத்தர் தன்னிடம் ஏதாவது குறை கண்டு, தன் அழகைக் குறை கூறிவிடுவாரோ என்று அவள் அஞ்சினாள்.

ராணி தன் அழகில் மயங்கியுள்ளாள் என்பதை பிம்பிசார மன்னர் புரிந்து கொண்டார். பகவான் புத்தரிடம் சென்றால் அவளுக்கு

நன்மையே வரும் எனக் கருதினார். பகவான் புத்தரிடம் சென்று தர்ம உபதேசம் பெற்று வந்த சிலரிடம், "நீங்கள் கேட்ட உபதேசங்களை ராணி கேமாவிற்கும் சொல்லுங்கள்" எனக் கேட்டுக்கொண்டார். பிறர் வாயிலாகப் பகவான் புத்தரின் உபதேசத்தைப் பற்றிக் கேள்வியுற்ற ராணி கேமாவுக்குப் பகவான் புத்தரைக் காணவேண்டும், அவருடைய உபதேசத்தைக் கேட்கவேண்டும் என்ற அவா ஏற்பட்டது. அவளும் தயக்கத்துடன் பகவான் புத்தரைக் காணச் சென்றாள்.

ராணி கேமா வருவதை அறிந்த பகவான் புத்தர், அவளின் மயக்கத்தைப் போக்கக் கருதி, அவளை விடப் பேரழகிய ஒரு பெண்ணைப் படைத்தார். தயக்கத்தோடு வந்த ராணி கேமா, பகவான் புத்தருக்கு அருகில் நின்ற பெண்ணைப் பார்த்ததும் பிரமித்து, அப்பெண்ணின் அழகில் அவள் மனம் லயித்துவிட்டது. அத்தகையதோர் அழகை அவள் கற்பனையில் கூடக் கண்டதில்லை.

"இப்பெண்ணின் அழகிற்கு முன்னால் நாம் எம்மாத்திரம். முழு நிலவிற்கு முன், ஒரு மின்மினிப் பூச்சி போல்தான்" என எண்ணிக்கொண்டாள். அப்பெண்ணின் முக அழகிலும், கூந்தல் அழகிலும், உடல் அழகிலும் மனம்லயித்து, தன்னையும் மறந்து நின்றுவிட்டாள் ராணி கேமா.

இதை அறிந்த பகவான் புத்தர், அழகும் இளமையும் நிலையானவை அல்ல என்பதை உபதேசம் செய்வதற்காக, அப்பெண்ணின் வயதை அதிகரிக்கச் செய்தார். ராணி கேமா பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அப்பதினாறு வயது பெண்ணின் வயது இருபது, முப்பது, நாற்பது, ஐம்பது, அறுபது எனக் கூடி, இளமை மறைந்து, முதுமை வந்துவிட்டது.

கருமையான கூந்தலும் நரைத்து உதிர்ந்தது; முழு நிலவு போன்ற முகத்தில், சுருக்கங்கள் தோன்றின; கன்னங்களிலும் கண்களிலும் குழி விழுந்தது; பற்கள் ஆடி உதிர்ந்தன; உடல் கூனி வளைந்தது; கைகளில் நடுக்கம். இவ்வாறாக ராணி கேமா பார்த்துக் கொண்டிருந்த போதே, அப்பெண்ணின் அழகும் இளமையும் மறைந்து, உடலுக்கு முதுமை வந்துவிட்டது.

பற்கள் உதிர்ந்து, முடி நரைத்து, குழி விழுந்த கண்களுடன் உடல் கூனிக்குறுகி, நடுங்கும் கையில் கோலை ஊன்றி நின்ற

முதுமையடைந்த கிழவியைப் பார்த்ததும், "சற்று முன் முழு நிலவைப் போல் அழகிய தோற்றத்துடன் இருந்தவள், முதுமையில் பல் உதிர்ந்து, முடி நரைத்து, உடல் கூனிக்குறுகி, தளர்ந்து நடுங்குகிறாளே! எனக்கும் இந்நிலைதானே, எனக்கும் முதுமை வருமே, அன்று இந்த உடலின் அழகு எங்கே? என்ற எண்ணங்கள் ராணி கேமாவின் உள்ளத்தில் எழுந்தன. அழகும் இளமையும் நிலைக்காது என்ற உண்மை அவளுக்கு விளங்கியது.

பகவான் புத்தர், தொடர்ந்து மரணத்தைக் காண்பித்தார். அந்தக் கிழவி, தரையில் விழுந்து, கைகளையும் கால்களையும் உதறிக்கொண்டு, இறந்தாள்.

தொடர்ந்து பகவான் புத்தர், உடலின் அழிவைக் காண்பித்தார். அவள் உடல் உப்பியது. அந்த உடலின் ஒன்பது துவாரங்களிலிருந்தும் சலமும் புழுக்களும் வெளி வந்தன. சிறிது நேரத்தில் உடலின் தோலும், சதையும் அழிந்து, வெறும் எலும்புக் கூடு மட்டுமே எஞ்சியிருந்தது.

இவை யாவற்றையும் கூர்ந்து கவனித்து வந்த ராணி கேமாவின் மனத்தில், "எனக்கும் இந்நிலைதான். ரூபத்தில் உண்மையில்லை. இளமையும் அழகும் என்றும் நிலைப்பதில்லை. இப்பெண்ணிற்கு வந்த முதுமையும் இறப்பும் எனக்கும் வரும். இதைப்போல் என் உடலும், உப்பி, மட்கி, அழியும்" என்ற உண்மை விளங்கியதும், தான் பேரழகி என்ற மயக்கத்திலிருந்து விழிப்புற்றாள். மயக்கம் தெளிந்ததும், அவள் கொண்டிருந்த செருக்கு அடியோடு அழிந்து விட்டது.

செருக்கு அழிந்ததும் உள்ளத்தில் பக்தி எழுந்தது. ஓடிச் சென்று பகவான் புத்தருக்கு முன் மண்டியிட்டு, தனக்குச் சரணம் அளிக்குமாறு வேண்டினாள். பகவான் புத்தரும், அவளுக்குத் தர்ம உபதேசம் செய்து, நல்வாழ்விற்கு வழி காட்டினார்.

இவ்வாறாகப் பகவான் புத்தர், ராணி கேமாவின் செருக்கை அழித்தார். கேமாவும் தர்ம உபதேசத்தை நம்பும் மனத்துடன் கேட்டு, உள்ளத்தில் பக்தியை வளர்த்து, பகவான் புத்தரின் சிஷ்யைகளிலேயே மிகச் சிறந்த சிஷ்யை என்ற பெருமையைப் பெற்றாள்.

2

## இளமை, அனுபவ அறிவு இல்லாத பருவம்

மனிதனின் பருவங்களிலேயே மிக இனியது இளமை. அழகும் மிடுக்கும் கம்பீரமும் இளமைக்கே உரியவை. இளமையில் உடலில் வலிமையும், வனப்பும் இருக்கும். புலன்களில் தெளிவு இருக்கும். இளமையும் இளமை அழகும் என்றும் இருக்கும் என்ற மயக்கமும் இருக்கும்.

மனதனின் பருவங்களிலேயே மிகவும் இனியது இளமை என்ற போதிலும், இளமை மிகவும் சிரமமான பருவமும் கூட. ஏன்?

இளமை அனுபவ அறிவு இல்லாத பருவம். அனுபவ உண்மைகளை உணர்ந்தறியாத பருவம். அனுபவ அறிவு குறைந்தும், இன்ப நாட்டம் மேலோங்கியும் நிற்கும் பருவம். புலன்கள், இன்பங்களை நுகரத் துடிக்கும் பருவம். மனம் இன்பங்களுக்காக ஏங்கும் பருவம். முன் யோசனையில்லாமல், பின் விளைவுகளை எண்ணிப் பாராமல் இன்பங்களை நாடும் பருவம்.

அனுபவ அறிவு இல்லாத இளமையில், நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் நுண்ணறிவும், செயல்களின் பின் விளைவுகளை முன் யோசனையுடன் எண்ணிப் பார்க்கும் வல்லமையும் இருக்காது. வாழ்க்கை இன்பங்களை நுகரத் துடிக்கும் இளமை, பின் விளைவுகளை எண்ணிப் பாராமல் இன்பங்களை நாடும்.

ஒழுக்கமில்லாதோர், இனிய சொற்களைப் பேசி மயக்குவார்கள். ஆசை மொழிகளைப் பேசிக் கவர்வார்கள். "இன்பங்களை இன்புற்று அனுபவி" என்று தூண்டுவார்கள்.

அனுபவ அறிவு இல்லாத இளமையில், இன்பங்களை நுகரத் துடிக்கும் இளமையில், ஒழுக்கமில்லாதோரின் ஆசை மொழிகள்

தேன்போல் இனிக்கும். மனம் அவற்றில் மயங்கி, பின் விளைவுகளை உதாசீனப்படுத்தி, இன்பங்களை நாடும்.

வாழ்க்கை இன்பங்களை நல்லொழுக்கங்களின் வழியும் நாடலாம்; தீயொழுக்கங்களின் வழியும் நாடலாம். தீயொழுக்கம் உடனே இன்பத்தைத் தரும். அது பழுத்துத் துன்பப் பலனைத் தரக் காலம் எடுக்கும். தீயொழுக்கம் துன்பப் பலனைத் தராத வரை, இன்பமாகத்தான் இருக்கும். ஆனால் அது பழுத்துத் தன் துன்பப் பலனைத் தரும்போது, ஆராத் துயரம் பற்றிக் கொள்ளும்.

இளமையில் மேற்கொள்ளும் ஒழுக்கமே, ஒருவனுடைய எதிர்காலத்தை நிர்ணயிக்கும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை" என்பது போல், இளமையில் ஒருவன் கற்ற ஒழுக்கம், வாழ்நாள் முழுதும் கூடவே இருக்கும்.

அனுபவ அறிவு இல்லாத இளமையில், தீயொழுக்கங்களைக் கற்றுவிட்டாலோ, அவை உள்ளிருந்தே கொல்லும் நோயைப் போல், ஒருவனுடைய வாழ்வைக் கெடுக்கும். ஒரு பகைவனைப் போல் தீயொழுக்கம் ஒருவனுடைய வாழ்வை அழிக்கும்.

ஆனால், அனுபவ அறிவு இல்லாத இளமையில், நல்லொழுக்கங்களைக் கற்றால், அவை நம்மை விட்டு ஒருபோதும் விலகாமல், வாழ்நாள் முழுதும் கூடவேயிருந்து, அதிக சுகமளிக்கும். நல்வாழ்விற்கு இதனிலும் சிறந்த துணை வேறில்லை.

ஆகவே, அனுபவ அறிவு இல்லாத இளமையில், ஆண்களும் பெண்களும் நன்னெறிப் பயிற்சிகளினால், தம்மையடக்கி, ஆள வேண்டும். அனுபவ உணர்ச்சியோடு, பெற்றோரும் பெரியோரும் கூறும் நல்லுரைகளைக் கருத்துடன் கேட்க வேண்டும். தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடாமல், நல்லொழுக்கங்களைக் கற்று, நல்வழியில் வாழ்க்கை இன்பங்களை நாட வேண்டும்.

அனுபவ அறிவு இல்லாத இளமையில், நன்னெறிப் பயிற்சிகளும்; பெற்றோரும் பெரியோரும் அனுபவ உணர்வோடு கூறும் அறிவுரைகளும் இளமைக்கு ஒரு பாதுகாப்பாக அமையும். இவை, இளைஞர்களை குற்றங்களிலிருந்து மீட்டு, நல்வழியில்

செலுத்துமென்பதால், இளமையில் இதனிலும் சிறந்த பாதுகாப்பு வேறில்லை.

மக்களில் பெரும்பான்மையோர், நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பாராமல், இன்பங்களைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, இன்பங்களுக்காகவே வாழ்வார்கள். இன்பங்களைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, இன்பங்களுக்காகவே வாழும் மக்களிடையே, இன்பங்களுக்காக ஏங்கும் மனத்தை நன்னெறிப் பயிற்சிகளினால் அடக்கியாள்வது சிரமமாகத்தான் இருக்கும். அதுவும், அனுபவ அறிவு இல்லாத இளமையில், இன்பங்களை நுகரத் துடிக்கும் மனத்தை, நல்லொழுக்க நெறிகளால் அடக்கியாள்வது எளிதான செயலன்று.

உலகெல்லாம் இன்புற்றிருக்க, தான் மட்டும் அஞ்சி, அஞ்சி வாழ்வது போல் தோன்றும். வாழ்க்கை இன்பங்கள் கைநழுவிப் போவது போல் தோன்றும். பெற்றோரின் கண்டிப்பும், பெரியோர் அனுபவ உணர்வோடு கூறும் அறிவுரைகளும், செவிக்கு வேதனையாக இருக்கும்.

வேதனையாக இருந்த போதிலும், முன் யோசனையுடன் பின் விளைவுகளை எண்ணிப் பார்த்து; தீயொழுக்கம் உடனே இன்பத்தைத் தந்த போதிலும், பின்னால் தப்பமுடியாத துன்பத்தையே தரும் என அறிந்து; தீயொழுக்கம், பழியையும் பாவத்தையும் தரும் என உணர்ந்து; தீயொழுக்கங்களில் இன்பத்தைத் நாடும் மனத்தை நன்னெறிப் பயிற்சிகளினால் தடுத்து நிறுத்தி, நல்வழியில் வாழ்க்கை இன்பங்களை நாடுவோர், இளமையிலும், முதுமையிலும், அடுத்த உலகிலும் சுகம் பெறுவார்கள்.


நன்னெறிகளையும், அனுபவ உணர்ச்சியோடு பெற்றோரும் பெரியோரும் கூறும் அறிவுரைகளையும், அலட்சியப் படுத்தி, தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடுவோர், தீயொழுக்கம் பழுத்துத் துன்பப் பலனைத் தரும்போது, இங்கும், அடுத்த உலகிலும், துன்புறுவார்கள்.

இளைஞர்களில் சிலர், இளமை மயக்கத்தில், வாலிபச் பெருமையில், கருத்தில்லாமல், சிந்தனையில்லாமல், நன்மை தீமைகளைச் சீர் தூக்கிப் பாராமல், பெரியோரை மதியாமல், பின்

விளைவுகளை அலட்சியப் படுத்தி, தீயொழுக்கங்களில் இன்பத்தை நாடுவார்கள். இத்தகைய ஆண், பெண் இருபாலாரும் இவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

"இளமை நிலையானது அல்ல, எனக்கும் முதுமை வரும்; எனக்கும் வியாதி வரும், என் வாழ்விலும் மாறுதல்கள் வரும்; நானே என் செயல்களுக்கு வாரிசு; பாவம் பழுக்காதவரை இன்பமாய்த்தான் இருக்கும்; பாவம் பழுக்கும்போது அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது; எனக்கும் இங்கே முடிவு உண்டு; எனக்கும் மரணம் வரும்; அடுத்த உலகிற்கு என்னோடு வருவது, நான் செய்த புண்ணியமும் பாவமும்தான்."

இவற்றை எண்ணிப் பார்த்து, தீயனவற்றையும், தீமைகளையும் விட்டுவிட வேண்டும். இளமை மயக்கத்திலிருந்து விழிப்புற்று, வாலிபப் பெருமையிலிருந்து விழிப்புற்று, கருத்துடைமையினாலும், முன் யோசனையினாலும், அடக்கத்தினாலும், ஒழுக்கத்தினாலும், தம்மைத் தாமே காத்துக் கொள்ள வேண்டும். இத்தகையோர் இளமையிலும், முதுமையிலும் சுகம் பெறுவார்கள்.



3

## எனக்கும் முதுமை வரும்

இளமையில், ஆண்களும் பெண்களும், தமக்கும் முதுமை வரும் என்பதை மறந்துவிடுவார்கள். ஒருவனின் முதுமை, அவன் இளமையில் வாழும் வாழ்வைப் பொருத்தே அமையும் என்பதை உணர்வதில்லை. முதியோரைப் பார்த்தும், இளமையில் குற்றங்கள் செய்து, முதுமையில் துன்புறுவோரைப் பார்த்தும், தனக்கும் முதுமை வரும், இளமையில் செய்யும் குற்றங்கள் முதுமையில் வருத்தும் என்பதை அறிவதில்லை.

இன்ப நாட்டம் மேலோங்கி நிற்கும் இளமையில், மயக்கமும் மறதியும் இருக்கும். வாலிபப் பெருமை இருக்கும். இளமையும், இளமை அழகும் என்றும் இருக்கும் என்ற மயக்கம் இருக்கும். இளமை மயக்கத்தில், ஆண்களும் பெண்களும், இளமை நிலையானது அல்ல என்பதை மறந்து, வாழ்க்கை இன்பங்களைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, இன்பங்களில் மயங்கி வாழ்வார்கள்.

இளமைக் காலமோ மிகக் குறுகியது. வாழ்க்கையில் இன்பங்களாகிய மலர்களைப் பறித்துக் கொண்டு, அதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே, நாம் அறியாமலே, நாம் உணராமலே, நாளொன்றாக ஓடி, இளமை மறைந்து, முதுமை நம்மைத் தழுவிக் கொள்ளும்.

கருமையான முடியும் நரைக்கும். வழ வழப்பான தோலில் சுருக்கங்கள் தோன்றும். கண்களின் பார்வை குன்றும். செவியும் தெளிவாகக் கேட்பதில்லை. சொல்லில் தளர்ச்சி. கன்னங்களில் குழி விழும். பற்கள் ஆடி உதிரும்.

உடலில் வலிமை குறைந்து, கூனிக் குறுகும். கைகளில் நடுக்கம், நடையில் தடுமாற்றம், மனத்தில் சோர்வு. இதுவே முதுமை.

வாழ்க்கையில் இன்பங்களாகிய மலர்களைப் பறித்துக்கொண்டு, அதிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே, நாம் அறியாமலே, நாம் உணராமலே, இளமையின் வலிமையும் வனப்பும் மறைந்து, உடலை முதுமை தழுவிக் கொள்ளும்.

முதுமை வந்த காலத்தில், ஒருவனின் நிலை என்னவென்பதை, அவன் இளமையில் வாழ்ந்த வாழ்வே நிர்ணயிக்கும். இளமையில், பெரியோரின் அறிவுரைகளை அலட்சியப் படுத்தி, நன்னெறிகளைப் புறக்கணித்து, தவறான கொள்கைகளைப் பின்பற்றி, தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடி, குற்றச் செயல்கள் செய்தவனை, முதுமை வந்த காலத்தில், பழியும், பாவமும், பிணியும், தண்டனையும், வறுமையும், மரண பயமும் சேர்ந்து வருத்தும்.

முதுமையோ துன்பம். முதுமையோடு சேர்ந்து, பழியும், பாவமும், பிணியும், தண்டனையும், வறுமையும், மரண பயமும் சேர்ந்து வருத்தினால், இதனிலும் கொடிய துன்பம் வேறில்லை. இத்தகையோர், முதுமை வந்த காலத்தில், இளமையில் செய்த குற்றங்களை எண்ணி எண்ணிப் பரிதவிப்பார்கள்.

ஆனால், இளமையில், பெரியோர் அனுபவ உணர்ச்சியோடு கூறும் அறிவுரைகளைக் கருத்துடன் கேட்டு, நன்னெறிகளில் ஒழுகி, சரியான கொள்கைகளைப் பின்பற்றி, நல்லொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடி, நற்செயல்கள் செய்தவனை, முதுமை வந்த காலத்தில், பழியும் பகையும் பாவமும் பிணிகளும் தண்டனையும் வறுமையும் மரணபயமும் வருத்துவதில்லை.

மாறாக இவர்கள், பெருமையும் புகழும் செல்வாக்கும் ஆரோக்கியமும் மனச்சாந்தியும் பெற்று இன்புறுவார்கள். "இளமையில் நல்வாழ்வு வாழ்ந்துள்ளேன்," எனத் தாம் இளமையில் வாழ்ந்த நல்வாழ்வை எண்ணி மனச் சாந்தி பெறுவார்கள்.

அறமும் பக்தியும் கல்வியும் பொருளும் இளமையில் தேடிக்கொள்ள வேண்டிய செல்வங்கள். இளமை மறைந்து, முதுமை நம்மைத் தழுவிக் கொள்வதற்கு முன், அறச் செல்வத்தையும், பக்திச் செல்வத்தையும், கல்விச் செல்வத்தையும், பொருட் செல்வத்தையும் நாம் தேடிக்கொள்ள வேண்டும்.

இளமையில் இச்செல்வங்களைத் தேடிக் கொள்ளாதோர், முதுமை வந்த காலத்தில், வேதனையுற்று, வருந்தி, ஏங்கிப் பரிதவிப்பார்கள். மீன்கள் இல்லாத குளத்தில் இரை தேடிக் காத்திருக்கும் கிழட்டுக் கொக்கு போல், முதுமை வந்த காலத்தில் ஏங்கி வருந்துவார்கள். பழைமையை எண்ணி எண்ணிப் பரிதவிப்பார்கள்.

இளமையில் அறத்தையும் பக்தியையும் கல்வியையும் தேடிக் கொள்ளாதோருக்கு, உடல் வளர்ந்து முதுமையடைந்த போதிலும், அறிவு வளர்வதில்லை என்கிறார் பகவான் புத்தர்.

***கல்வியில்லாதவன் மாடுபோல் முதிர்ந்து வளர்கிறான்; அவனுடைய ஊன்தான் பெருக்கிறது. ஆனால் அறிவு வளர்வதில்லை.***

ஆகவே, வாலிப மயக்கத்தில், இளமை நிலையானது அல்ல என்பதை மறந்து; முதுமை வரும் என்பதை மறந்து; இளமையில் செய்யும் குற்றங்கள் முதுமையில் வருத்தும் என்பதையும் மறந்து; ஒழுக்கமில்லாமல், தன்னடக்கமில்லாமல், தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடுவோர், "எனக்கும் முதுமை வரும்", என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

முடி நரைத்து, பற்கள் உதிர்ந்து, பார்வை குன்றி, உடல் கூனிக்குறுகி, நடை தளர்ந்து, கையில் கோலுடன் தட்டுத் தடுமாறிச்செல்லும் ஓர் ஆணையோ, பெண்ணையோ காணும்போது; "இளமை நிலையானது அல்ல; எனக்கும் முதுமை வரும்; இன்று எனக்கு உடலில் வலிமையும் வனப்பும் புலன்களில் தெளிவும் இருந்த போதிலும், என் உடலுக்கும் முதுமை வரும். இளமையில் செய்யும் குற்றங்கள் முதுமையில் வருத்தும்" எனத் தன்னைத் தானே எச்சரித்து, இளமை மயக்கத்தில் இருந்து விழிப்புற்று, தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடாமல், நன்னெறிப் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு அடிக்கடி சிந்திப்போர், இளமை மயக்கத்தில் இருந்து விழிப்புற்று, கருத்துடனும் சிந்தனையுடனும் நிதானத்துடனும், அடக்கத்துடனும் ஒழுக்கத்துடனும் முன் யோசனையுடனும் தம்மைக் காத்துக் கொள்வார்கள். இவர்கள் இளமையிலும், முதுமையிலும் சுகம் பெறுவார்கள்.

4

## எனக்கும் வியாதி வரும்

இளமையில் உடலில் ஆரோக்கியம் இருக்கும். ஆரோக்கியம் ஒரு செல்வம். இளமையில் நாம் பெற்ற இச்செல்வத்தை, நல்ல பழக்கங்களாலும், முறையான பயிற்சிகளாலும், ஒழுங்குகளாலும், அடக்கத்தினாலும், நல்லொழுக்க நெறிகளாலும், காத்துவர வேண்டும். காத்துவரா விட்டால், இச்செல்வத்தை நாம் இழந்து விடுவோம். நோய்கள் உடலைப் பற்றிக் கொள்ளும்.

இளமையும், இளமை ஆரோக்கியமும், நிலையானவை அல்ல. உடலுக்கு முதுமை வருவது போல் நோயும் வரும். உடலை நோய் பீடிக்காத வரை, ஆரோக்கியம் ஒரு செல்வம் என்பதை நாம் உணர்வதில்லை. உடலை நோய்கள் பற்றிக் கொண்டபின், இழந்துவிட்ட செல்வத்திற்காக ஏங்கி என்ன பலன்?

முதுமையிலிருந்து நாம் தப்ப முடியாத போதிலும், கடும் பிணிகள் நம்மை வருத்தாமல் நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம். இளமையில் நாம் பெற்ற ஆரோக்கியத்தைக் காத்து வந்தோமென்றால், கடும்பிணிகள் நம்மை அணுகாது. இளமையிலும் முதுமையான காலத்திலும் ஆரோக்கியம் இருக்கும்.

இளமை ஆரோக்கியத்தைக் காக்காவிட்டால், பிணிகள் உடலைப் பற்றிக் கொள்ளும். முதுமை வந்த காலத்தில் நோய்கள் உடலை வருத்தித் துன்புறுத்தும். முதுமையோ துன்பமானது. முதுமையோடு சேர்ந்து கடும் பிணிகளும் உடலை வருத்தினால் இதனிலும் கொடிய வேதனை வேறில்லை.

இளமையில் நாம் வாழும் வாழ்வே, எதிர்காலத்தில் நமது ஆரோக்கியத்தை நிர்ணயிக்கும். இளமை ஆரோக்கியத்தை நல்ல

பழக்கங்களாலும், முறையான பயிற்சிகளாலும் ஒழுங்காலும் அடக்கத்தாலும் நல்லொழுக்க நெறிகளாலும் காத்து, நல்வழியில் வாழ்க்கை இன்பங்களை நாடுவோர், இளமையிலும் முதுமையிலும் சுகம் பெறுவர்.

இளமையில், தீய பழக்கங்களிலும், தீயொழுக்கங்களிலும் இன்பங்களை நாடி, உடலை வருத்துவோரை, முதுமை வந்த காலத்தில் கடும் பிணிகள் பற்றிக் கொள்ளும். கடும் பிணிகள் உடலை வருத்தும் போது, இளமையில் தாம் வாழ்ந்த வாழ்வை எண்ணி எண்ணி வருந்துவார்கள்.

இளமை ஆரோக்கியம் நிலையானது அல்ல என்பதைச் சிலர் உணர்வதில்லை. அனுபவ அறிவு இல்லாத இளமையில், இளமை ஆரோக்கியம் என்றும் இருக்கும் என்ற மயக்கம் சில இளைஞர்களிடம் இருக்கும். இவர்கள் இளமை ஆரோக்கியப் பெருமையில், முன் யோசனையில்லாமல், பின் விளைவுகளை எண்ணிப் பாராமல், தீய பழக்கங்களிலும் தீயொழுக்கங்களிலும் இன்பங்களை நாடுவார்கள்.

தீயொழுக்கங்களில் இன்பங்களை நாடி, பின் கடும் பிணிகளால் துன்புற்று வருந்துவோரைப் பார்த்தும், தமக்கும் வியாதி வரும் என்பதை இவர்கள் உணர்வதில்லை. பிறருக்குத்தான் வியாதி வரும், தனக்கு வியாதி வராது என்ற மயக்கம் இத்தகையோரிடம் இருக்கும்.

அனுபவ அறிவு இல்லாத இளமையில், இளமை ஆரோக்கியப் பெருமையில், தீயொழுக்கங்களில் இன்பங்களை நாடுவோர், கடும் பிணிகளால் துன்புறுவோரைக் காணும்போது, "எனக்கும் வியாதி வரும்" எனத் தம்மைத் தாமே எச்சரித்துக் கொள்ள வேண்டும்.

'இப்போது எனக்கு உடல் ஆரோக்கியம் உண்டு. இப்போதுள்ள ஆரோக்கியம் என்றும் நிலையானதென்று கொள்ள முடியாது. "எனக்கும் வியாதி வரும். தற்போது தீயொழுக்கங்களில் இன்பங்களை நாடினேன் என்றால், பின்னால் என்னையும் கடும் பிணிகள் வருத்தும்,” எனத் தன்னைத் தானே எச்சரித்து, இளமை மயக்கத்தில் இருந்து விழிப்புற்று, தீயொழுக்கங்களை விட்டுவிட வேண்டும்.

தீயொழுக்கங்களில் இன்பங்களை நாடாமல், நல்ல பழக்கங்களாலும், முறையான பயிற்சிகளாலும் ஒழுங்காலும் அடக்கத்தாலும் நல்லொழுக்க நெறிகளாலும் உடல் நலத்தைக் காத்து, நல்வழியில் வாழ்க்கை இன்பங்களை நாட வேண்டும். இவ்வாறு வாழ்வோர், இளமையிலும் முதுமையிலும் உடல் நலம் பெற்று சுகம் பெறுவர்.



5

## எனக்கும் மாறுதல்கள் வரும்

நல்ல நிலையில், இன்பமாக இருக்கும் காலத்தில், மறதி இருத்தல் கூடாது. மறதி என்பது, நல்ல நிலையில், இன்பமாக இருக்கும் காலத்தில், மிதமிஞ்சிய மகிழ்ச்சியினால், தனக்கும் மாறுதல்கள் வரும் என்பதை மறந்து, பிழைகளைச் செய்வதாகும். மிதமிஞ்சிய மகிழ்ச்சி அறிவைக் கெடுக்கும். மறதி உடையவனுடைய பொருளும் பெருமையும் புகழும் செல்வாக்கும் மறதியின் காரணமாகக் குறைந்துவிடும். எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்த போதிலும், மறதி உள்ளவனின் வளர்ச்சி கெடும். அவனும் கெடுவான்.

செல்வம் வந்தபோது, தன் முன்னால் நிலையையும், எதிர் காலத்தையும் மறந்து, நிகழ்காலப் பெருமையில் மனம் மயங்கி, மறதியினால் பிழைகள் செய்து கெட்டவர்கள் பலர்.

பதவியும் அதிகாரமும் செல்வாக்கும் வந்த காலத்தில், தன் முன்னால் நிலையையும், எதிர் காலத்தையும் மறந்து, நிகழ்காலப் பெருமையில் மனம் மயங்கி, மறதியினால் பிழைகள் செய்து கெட்டவர்கள் பலர்.

நிகழ்காலப் பெருமையில் மனம் மயங்கி, எதிர்காலத்தை மறந்து, மறதியினால் குற்றங்களைச் செய்பவன், துன்பம் வந்த போது, தான் மறதியினால் செய்த பிழைகளை எண்ணி, எண்ணிப் பரிதவிப்பான்.

உதாரணத்திற்குப் பொருள் செல்வத்தை எடுத்துக் கொள்வோம்:

செல்வம் வந்த காலத்தில் மறதி இருத்தல் கூடாது. எப்படி வந்ததோ, அதுபோல் செல்வம் கைவிட்டுப்போகும் என்பதை மறந்துவிடக்கூடாது, மிதமிஞ்சிய மகிழ்ச்சியில், செல்வம் என்றும் இருக்கும் என்ற மயக்கத்தில், செல்வத்தை விரயம் செய்யக்கூடாது அல்லது, தன் முன்னால் நிலையை மறந்து, நிகழ்காலச் செழிப்பில் மயங்கி, பெருமை கொள்ளலாகாது.

செல்வம் வந்த காலத்தில், நல்லொழுக்க நெறிகளால், செல்வத்தைக் காத்துவர வேண்டும். காக்காவிட்டால், செல்வம் கைவிட்டுப் போய்விடும். செல்வம் வந்த காலத்தில், தன் நிகழ் காலப் பெருமையில் மயங்கி, பிழைகள் செய்பவன், சிறுகச் சிறுகச் செல்வத்தை இழந்து விடுவான். செல்வம் கைவிட்டுப் போனபின், பெருமையில் அறிவிழந்து செய்த பிழைகளை எண்ணி எண்ணிப் பரிதவிப்பான்.

பொறுப்பும், பதவியும், அதகிகாரமும், செல்வாக்கும் வந்த காலத்தில் மறதி இருத்தல் கூடாது. ஒழுக்க விதிகளின்படி ஒழுகி, நல்லொழுக்கத்தால் பெருமையைக் காத்துக் கொள்ள வேண்டும். பொறுப்பும் பதவியும் அதிகாரமும் பெற்றவன், தன் நிகழ்காலப் பெருமையில் மகிழ்ந்து, எதிர்காலத்தை மறந்து, மறதியினால் பிழைகளைச் செய்தால், உயர்ந்த நிலையிலிருந்து விழுந்துவிடுவான். உயர்ந்த நிலையிலிருந்து விழுந்த பின், தான் மறதியினால் செய்த பிழைகளை எண்ணி, எண்ணிப் பரிதவிப்பான்.

இலாபம், நஷ்டம்; இன்பம், துன்பம்; புகழ்ச்சி, இகழ்ச்சி; இவை எல்லாருக்கும் வரும். நல்ல நிலையில், இன்பமாக இருக்கும் காலத்தில், இதை மறக்கக்கூடாது. ஆனால் சிலர், இதை மறந்து விடுவார்கள். செல்வமும் செல்வாக்கும் வந்த காலத்தில், மகிழ்ந்து, பெருமை கொண்டு, செருக்குடன் வாழ்வார்கள்.

தம் முன்னால் நிலையையும், எதிர்காலத்தையும் மறந்து, நிகழ்காலப் பெருமையில் மயங்கி வாழ்வார்கள். நிகழ்காலப் பெருமையில் மயங்கி, தம் வாழ்விலும் மாறுதல்கள் வரும் என்பதை மறந்து, மிதமிஞ்சிய மகிழ்ச்சியில் அறிவிழந்து, பிழைகள் செய்வார்கள். செல்வத்தையும், செல்வாக்கையும் இழப்பார்கள். இழந்த பின் பெருமையினால் செய்த பிழைகளை எண்ணி, எண்ணிப் பரிதவிப்பார்கள்.

ஆகவே, நல்ல நிலையில், இன்பமாக இருக்கும் காலத்தில் மறதி இருத்தல் கூடாது. செல்வமும் செல்வாக்கும் வந்தபோது, இவற்றில் திளைத்து மகிழும்போது, மறதியினால் கெட்டவர்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

எனக்கும் மாறுதல்கள் வரும்" எனத் தன்னைத்தானே எச்சரித்து, விழிப்புற்று, நிதான உணர்ச்சியினாலும், அடக்கத்தாலும், ஒழுக்கத்தாலும் தம் பெருமையைக் காத்துக் கொள்ள வேண்டும்.

5

## பாதசாராவின் கதை

பாதசாரா, சவத்தி பட்டணத்தில் வாழ்ந்த ஒரு செல்வந்தரின் மகள். அவளுடைய தந்தை ஒரு வியாபாரி. செல்வம் மிகுந்த குடும்பத்தில் பிறந்த பாதசாரா, செல்வாக்குடன் வளர்ந்து பருவ வயதை அடைந்தாள். பருவ வயதை அடைந்ததும், பெற்றோர் அவளுக்கு நல்ல அறிவுரைகளைக் கூறி, தக்கப் பாதுகாப்புடன் வளர்த்து வந்தார்கள்.

பாதசாரா பதினாறு வயதை அடைந்த போது, தன் தந்தையின் வீட்டில் வேலை செய்த வேலைக்காரனோடு உறவு கொண்டு, தவறாக நடந்து கொண்டாள். இதை அறியாத பெற்றோர், மற்றொரு செல்வந்தரின் குடும்பத்தில் அவளைத் திருமணம் செய்து கொடுக்க ஏற்பாடுகள் செய்தனர். பெற்றோர் தன் திருமண ஏற்பாடுகளைச் செய்கின்றனர் என அறிந்ததும், பாதசாரா தன் காதலனுடன் வீட்டைவிட்டு ஓடிவிட்டாள்.

இருவரும் சவத்திப் பட்டணத்திலிருந்து ஓடி, வெகுதூரத்தில் உள்ள ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தார்கள். கணவன் பிறர் நிலத்தில் கூலிக்கு வேலை செய்தான்; காட்டில் போய் விறகு வெட்டினான். மனைவி, நெல் இடித்தாள்; கேணியிலிருந்து நீர் சேந்தினாள்; சட்டி, பானைகள் கழுவினாள்; சமைத்தாள்; வீட்டு வேலைகளை எல்லாம் தானே செய்தாள்.

இவ்வகையான வேலைகளைச் செய்தறியாத பாதசாராவின் கைகள் இரண்டும் கொப்பளித்துப் புண்ணாகி, பெரும் வேதனை தந்தன. இரவில் கணவன் அறியாமல் தன் பழைய செல்வாக்கை எண்ணிக் கண்ணீர் வடித்தாள்.

சில காலங்களுக்குப் பின் பாதசாரா கருவுற்றாள். பிரசவ காலம் நெருங்கியதும், தன் கணவனிடம் கூறினாள்: "இங்கு எனக்கு

உதவுவோர் எவருமில்லை; பெற்றோர் உள்ளத்தில் பிள்ளையின் மீது இரக்கம் இருக்கும். நான் தவறு செய்துவிட்ட போதிலும், என் தற்போதைய நிலையைப் பார்த்தால், என் பெற்றோர் என் மீது இரக்கம் கொண்டு என்னை மன்னித்துவிடுவார்கள். ஆகவே என்னை என் பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள். நான் என் பெற்றோர் வீட்டில் பிரசவிக்க விரும்புகின்றேன்."

அவள் கணவன், "என்ன சொல்கிறாய்! உன் பெற்றோர் என்னைப் பார்த்ததுமே என்னைத் தண்டிப்பார்கள்" எனக்கூறி, அவளைப் பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச் செல்ல மறுத்துவிட்டான்.

பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்படி மீண்டும் மீண்டும் பாதசாரா தன் கணவனிடம் கெஞ்சினாள். ஆனால் கணவனோ, அங்குப் போனால் தன்னைத் தண்டித்துத் துன்புறுத்துவார்கள் என அஞ்சி, அவளுடைய வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டான்.

ஒரு நாள், கணவன் விறகு வெட்டக் காட்டிற்குச் சென்றுவிட்ட பின், அண்டை வீட்டாரிடம் " என் கணவர் கேட்டால் நான் என் பெற்றோர் வீட்டிற்குச் சென்றுள்ளதாகக் கூறுங்கள்" எனக்கூறி, சவத்திப் பட்டணத்திற்கு நடந்து சென்றாள்.

கணவன் வீடு திரும்பியதும் மனைவி வீட்டில் இல்லாததைக் கண்டு, அண்டை வீட்டாரிடம் விசாரித்து, பெற்றோர் வீட்டிற்குச் சென்றுவிட்டாள் என்பதை அறிந்தான். "அவளைத் தடுத்து நிறுத்த வேண்டும்," என எண்ணி, மனைவியைத் தேடிக்கொண்டு சவத்திக்குப் போகும் பாதையில் ஓடினான்.

முழு மாத கர்ப்பிணியான தன் மனைவி, சிரமத்துடன் நடந்து சென்றதைக் கண்டதும் ஓடிச் சென்று, அவளைத் தடுத்து நிறுத்தி, தன்னோடு திரும்பி வருமாறு கெஞ்சினான். ஆனால் அவள் மறுத்துவிட்டாள். "நான் என் பெற்றோர் வீட்டிற்குப் பிரசவத்திற்குப் போகிறேன்," எனக்கூறி, தொடர்ந்து நடந்தாள்.

சிறிது தூரம் போனதும், பிரசவ வேதனை ஆரம்பித்தது. கணவனிடம்," எனக்குப் பிரசவ வேதனை ஆரம்பித்துவிட்டது" எனக்கூறி, ஒரு புதரின் பின்னால் போய், மிக வேதனைப்பட்டு ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்.

குழந்தை பிறந்ததும், கணவனிடம், "எதற்காக நான் என் பெற்றோர் வீட்டிற்குப் புறப்பட்டேனோ அது நடந்துவிட்டது," எனக்கூறி, கணவனுடன் திரும்பிவிட்டாள்.

சிலகாலம் கழித்து, அவள் மீண்டும் கருவுற்றாள். பிரசவ காலம் நெருங்கியதும், முன்புபோல், தன் பெற்றோர் வீட்டிற்கு அழைத்தச் செல்லும்படித் தன் கணவனிடம் கெஞ்சினாள். கணவன் மறுத்துவிட்டான்.

முன்போலவே கணவன் வேலைக்குச் சென்றுவிட்டபின், அண்டை வீட்டாரிடம் சொல்லிவிட்டு, மகனை இடுப்பில் இடுக்கிக் கொண்டு, தன் பெற்றோர் வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள்.

வீட்டிற்கு வந்த கணவன், மனைவி தன் பெற்றோர் வீட்டிற்குப் போகிறாள் என அறிந்து, அவளைத் தேடி ஓடிச் சென்று தடுத்து நிறுத்தி, திரும்பி வருமாறு கெஞ்சினான். அவள் மறுத்துவிட்டாள்.

வானத்தில் கருமேகங்கள் கூடி, இடி மின்னலுடன் மழை பெய்ய ஆரம்பித்தது. ஒதுங்க இடமேதுமில்லை. மழையும் நிற்கவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையில், அவளுக்குப் பிரசவ வேதனை ஆரம்பித்தது.

கணவனிடம், "எனக்குப் பிரசவ வேதனை ஆரம்பித்துவிட்டது. என்னால் தாங்க முடியவில்லை. மழைக்கு ஒதுங்க ஏதாவது இடம் பாருங்கள்," எனக்கூறினாள்.

கொட்டும் மழையில், அவளைச் சாலையோரத்தில் உட்கார வைத்துவிட்டு, ஒதுங்க இடம் தேடி, கையில் கோடரியுடன், இங்குமங்கும் ஓடினான். சற்றுத் தூரத்தில் ஓர் எறும்புப் புற்றின் மேல், சில உயர்ந்த செடிகளைப் பார்த்ததும், அவற்றை வெட்டி ஒரு சிறு பந்தல் போடுவோம் என எண்ணிக் கொண்டு அங்கு ஓடினான்.

புற்றில் ஏறிச் செடிகளை வெட்டும்போது, ஒரு விஷநாகம் புற்றிலிருந்து வெளியாகி அவனைத் தீண்டிவிட்டது. அவன் உடலில் விஷம் பரவி அங்கேயே விழுந்து உயிர் துறந்தான்.

இதையறியாத பாதசாரா, பிரசவ வேதனையுடன் கணவனுக்காகக் காத்திருந்தாள். கணவன் திரும்பாததைக் கண்டு," கணவன் நம்மைக் கைவிட்டு விட்டார்" என்ற அச்சம் பிரசவ வேதனையுடன் சேர்ந்து அவளை வருத்தியது.

சாலை ஓரத்தில், பெரும் வேதனையுடன் தன் இரண்டாவது மகனைப் பிரசவித்தாள். இருள் எங்கும் சூழ்ந்துவிட்டது. இடியும், மின்னலும், மழையும் ஓய்ந்தபாடில்லை. முதல் மகன் குளிரினாலும், பசியினாலும், பயத்தினாலும் வீரிட்டுக் கத்தினான். புதிதாய்ப் பிறந்த குழந்தையும், குளிரினால் வீரிட்டுக் கதறியது. குழந்தைகள் இரண்டையும் அணைத்துக் கொண்டு, காற்றினாலும், மழையினாலும் நடுங்கிக் கொண்டு இரவைக் கழித்தாள்.

மறுநாள் விடிந்ததும், இரவு முழுதும் மழையினாலும், குளிராலும் நடுங்கிக் கொண்டிருந்த பாதசாராவின் உடல் வெளுத்து இரத்தம் இல்லாததுபோல் தோன்றியது.

பிறந்த குழந்தையை மார்போடு அணைத்துக் கொண்டு, மூத்த மகனைக் கையில் பிடித்துக் கொண்டு, "உன் தந்தை நம்மை விட்டுப் போய்விட்டார்" எனக் கூறி, சவத்திப் பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டாள்.

சிறிது தூரம் சென்றதும், எறும்புப் புற்றுக்கு அருகில் கணவன் இறந்து கிடப்பதைக் கண்டதும், "என் கணவரும் இறந்துவிட்டார். இதற்கெல்லாம் நான்தான் காரணம்" என அழுது புலம்பிக் கொண்டு, சவத்திப் பட்டணத்தை நோக்கி நடந்தாள்.

வழியிலே குறுக்கிட்ட நதி, அன்று இரவு பெய்த பெருமழையினால் நிரம்பி, நீர் கரை புரண்டு ஓடியது. சில இடங்களில் முட்டி அளவும், சில இடங்களில் இடுப்பளவும் ஆற்று நீர் ஓடியது. தன் உடல் பலவீனமடைந்த நிலையில், இரு குழந்தைகளையும் தூக்கிக் கொண்டு, நதியைக் கடக்க முடியாது என்று உணர்ந்தாள்.

மூத்த மகனை இக்கரையில் விட்டுவிட்டு, இரண்டாவது மகனைத் தூக்கிக் கொண்டு, நதியைக் கடந்தாள். ஒரு மரத்தின் கிளையை உடைத்து, இலைகளைத் தரையில் பரப்பி, அதன் மேல் குழந்தையைப் படுக்க வைத்தாள். அடுத்த கரையில் அழுது கொண்டு நிற்கும் மூத்த மகனைக் கூட்டிவர மீண்டும் நதிக்குள் இறங்கினாள்.

நீர் வேகமாக ஓடியதால், விரைந்து நடக்க முடியவில்லை. தரையில் படுக்க வைத்துவிட்டு வந்த குழந்தைக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என அஞ்சி, திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு, மெல்ல நதியைக் கடந்தாள்.

இவள் நதியில் நடுப் பகுதியை அடைந்த போது, ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த கழுகு ஒன்று தரையில் படுத்திருந்த குழந்தையைப் பார்த்துவிட்டது. குழந்தையைத் துண்டு மாமிசம் எனக் கருதி, அதைப் பற்றிச் செல்ல வேகமாகத் தரையை நோக்கி இறங்கியது.

நடு நதியில், இடுப்பளவு நீரில் நின்ற பாதசாரா, தரையில் படுத்திருக்கும் குழந்தையை நோக்கிப் பறந்து வரும் கழுகைப் பார்த்தாள். நீரோட்டம் விரைவாய்ச் சென்றதால், அவளால் ஓடிச் சென்று குழந்தையைக் காப்பாற்ற முடியவில்லை. கைகளை உயர்த்தி, கூச்சலிட்டு, கழுகை விரட்டினாள். ஆனால் கழுகு, குழந்தையைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்றது.

அடுத்த கரையில் நின்று கொண்டிருந்த மகன், தன் தாய் நட்டாற்றில் நின்று கொண்டு, கைகளை உயர்த்திக் கூச்சலிடுவதைப் பார்த்ததும், "அம்மா கூப்பிடுகிறாள்" என எண்ணி, நதிக்குள் இறங்கினான். வேகமாக ஓடிய ஆற்று வெள்ளம் அவனை அடித்துச் சென்றது.

இவ்வாறாகப் பாதசாரா, தன் இரு குழந்தைகளையும், கணவனையும் இழந்தாள். நதிக் கரையில் ஒப்பாரியிட்டு, அழுது புலம்பினாள். "ஒரு மகனைக் கழுகு தூக்கிச் சென்றுவிட்டது, மற்ற மகனை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. கணவர் சாலையோரத்தில் இறந்து கிடக்கிறார் “என அழுது புலம்பிக் கொண்டு சவத்திப் பட்டணத்தை நோக்கி நடக்கலானாள்.

வழியில் அவள் ஒரு மனிதரைச் சந்தித்தாள். அவரிடம்," ஐயா, எங்கிருந்து வருகிறீர்கள் எனக் கேட்டாள். அவரும் "நான் சவத்தியிலிருந்து வருகிறேன்" எனக் கூறினார். தன் தந்தையின் பெயரைக் கூறி, தன் பெற்றோர் குடும்பத்தைப் பற்றி விசாரித்தாள்.

அவரும், "அந்தக் குடும்பத்தை நான் அறிவேன். தயவு செய்து அந்தக் குடும்பத்தைப் பற்றி என்னிடம் ஏதும் கேட்க வேண்டாம். மற்ற குடும்பங்கள் சம்பந்தமாகக் கேள்" எனக் கூறினார்.

"இந்த ஒரு குடும்பத்தைத்தான் நான் அறிவேன்" எனக் கூறினாள்.

"நேற்றிரவு வீசிய புயலினால் அந்த வீடு சரிந்து விட்டது. அந்த வியாபாரியும், அவர் மனைவியும், மகனும், வீடு சரிந்து விழுந்ததில், வீட்டின் இடிபாடுகளில் சிக்குண்டு இறந்துவிட்டார்கள். உறவினரும், அண்டை அயலாரும், அவர்களின் உடல்களைச் சுடுகாட்டில் இப்போது தகனம் செய்து கொண்டிருக்கிறார்கள்" எனக் கூறினார்.

கணவனையும், இரண்டு மகன்களையும் இழந்துவிட்ட பாதசாரா, மேலும் தன் பெற்றோரையும், சகோதரனையும் இழந்துவிட்டதை அறிந்ததும், அக்கணமே அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது.

"என் கணவர் சாலையோரத்தில் இறந்து கிடக்கிறார். ஒரு மகனை கழுகு தூக்கிச் சென்றுவிட்டது; இன்னொரு மகனை வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது; என் தாயும் தந்தையும் தம்பியும் மயானத்தில் எரிகிறார்கள்" எனக் கத்திக் கொண்டு, சவத்திப் பட்டணத்திற்கு ஓடினாள். அவள் அணிந்திருந்த ஆடைகள் அவிழ்ந்து விழுந்து விட்டதையும் உணராமல், நிர்வாணக் கோலத்தில், சவத்திப் பட்டணத்தின் வீதிகளில் அலைந்தாள்.

அவளைப் பார்த்தோர், "பைத்தியம், பைத்தியக்காரி," என விலகிச் சென்றார்கள். சிலர் அவள் மேல் குப்பையைக் கொட்டினார்கள். சிலர் அவள் மேல் மண் கட்டிகளை எறிந்தார்கள்.

இச்சமயம் பகவான் புத்தர், சவத்திப் பட்டணத்தில், ஜெட்டவன மடத்தில் தங்கியிருந்தார். தன் ஞானப் பார்வையால், பாதசாராவின் நிலையை அறிந்து, அவள் மீது கருணை கொண்டு, அவள் ஜெட்டவன மடத்திற்கு வரவேண்டுமென்று மனத்தால் விரும்பினார். பாதசாராவும் தன்னையறியாமலேயே, ஜெட்டவன மடத்திற்கு வந்து சேர்ந்தாள்.

அப்போது, பகவான் புத்தர், ஜெட்டவன மடத்தில், மக்களுக்குத் தர்ம உபதேசம் செய்து கொண்டிருந்தார். நிர்வாணக் கோலத்தில் வரும் பாதசாராவைக் கண்டதும் அங்குக் கூடியிருந்தோர், "பைத்தியம் வருகிறது. அவளை உள்ளே விடாதீர்கள், துரத்துங்கள்" எனக் கூச்சலிட்டு, அவளைத் துரத்தினார்கள்,

பகவான் புத்தர் அவர்களிடம், "அவளைத் தடுக்க வேண்டாம், உள்ளே வரட்டும்" எனக் கூறினார்.

மக்கள் ஒதுங்கி, அவளுக்குப் பாதை விட்டார்கள். பாதசாரா தான் நிர்வாண கோலத்தில் இருப்பதையும் உணராமல், மக்களிடையே நடந்து, பகவான் புத்தரின் அருகில் வந்தாள்.

பகவான் புத்தர் "பெண்ணே, உன் சுய நினைவைப் பெறு," எனக் கூறினார்.

அக்கணமே, அவள் தன் சுய நினைவைப் பெற்றாள். பைத்தியம் தெளிந்து தன் சுய நினைவைப் பெற்ற பாதசாரா, தன் நிர்வாண நிலையை உணர்ந்ததும், கூனிக்குறுகி, தரையில் அமர்ந்தாள். கூட்டத்திலிருந்த ஒரு மனிதர், தம் மேலாடையை அவளிடம் வீசினார்.

மேலாடையால் தன் உடலை மூடிக் கொண்டு, பகவான் புத்தரின் முன் மண்டியிட்டு, "பகவான் எனக்குச் சரணமளியுங்கள். எனக்குத் தஞ்சமளியுங்கள். என் கணவர் சாலையோரத்தில் இறந்து கிடக்கிறார். ஒரு மகனைக் கழுகு தூக்கிச் சென்றுவிட்டது. இன்னொரு மகனை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்றுவிட்டது. நேற்று வீசிய புயலில் என் பெற்றோரின் வீடும் சரிந்து விழுந்து விட்டது. அதில் என் தாயும், தந்தையும், சகோதரனும் இறந்துவிட்டார்கள். அவர்கள் உடலைச் சுடுகாட்டில் எரித்துக் கொண்டிருக்கிறார்கள்," எனக் கூறி அழுதாள்.

பகவான் புத்தர் அவளிடம், "பாதசாரா, இனிமேலும் மனம் கலங்காதே! உனக்குச் சரணமும், தஞ்சமும், பாதுகாப்பும் அளிக்கும் ஒருவரிடம் நீ வந்து விட்டாய். நீ கூறியவை யாவும் உண்மைதான். உன் மகன் ஒருவனைக் கழுகு தூக்கிச் சென்றுவிட்டது; இன்னொரு மகனை ஆற்று வெள்ளம் அடித்துச் சென்று விட்டது; உன் கணவர் சாலையோரத்தில் இறந்து கிடக்கிறார். உன் தாயும், தந்தையும், சகோதரனும் வீடு சரிந்து விழுந்து அதில் இறந்துவிட்டார்கள். இதைப்போல் முற்பிறவிகளிலும் மகனை இழந்து, பெற்றோரை இழந்து, அன்பிற்குரியோரை இழந்து, துக்கத்தில் நீ வடித்துள்ள கண்ணீர் நான்கு கடல் நீரினும் அதிகம்," எனக்கூறி, அவளுக்குத் தர்ம உபதேசம் செய்தார்.

தர்ம உபதேசத்தைக் கேட்ட பாதசாராவின் உள்ளத்தில் களங்கமற்ற, பரிசுத்தமான பக்திக் கண் திறந்தது. அவள் பகவான் புத்தரிடம் சரணடைந்து, தவ வாழ்க்கையை மேற்கொண்டு, அவாவை அழித்து, அறியாமையிலிருந்து விடுபட்டு துக்க நிவாரணம் பெற்றாள். மாறிமாறி வரும் பிறப்பு, மரணத்திலிருந்து விடுபட்டு மோட்சமடைந்தாள்.

7

## இளமையிலும், முதுமையிலும், அடுத்த உலகிலும் இன்புறுவோர்

சிலருக்கு இளமையில் நல்ல சுபாவம் இருக்கும். அன்பு இருக்கும். நன்னெறிகளில் நாட்டம் இருக்கும். நல்லனவற்றில் உள்ளம் மகிழும்.

நன்னெறிகளில் நாட்டமுள்ள இவர்களுக்கு, அறத்தில் உறுதியான நம்பிக்கை இருக்கும். அறத்தில் நம்பிக்கை உள்ள இவர்கள், தீமையையும் தீயனவற்றையும் கண்டு அஞ்சி, அறவிதிகளின்படி ஒழுகி, நல்லொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடுவார்கள்.

நன்னெறிகளில் நாட்டமுள்ள இவர்களுக்கு, நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் நுண்ணறிவு இருக்கும். நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, கெடுதி விளைவிக்கக் கூடியவற்றைக் கெடுதி விளைவிக்கக் கூடியவை என்றும், நன்மை விளைவிக்கக் கூடியவற்றை நன்மை விளைவிக்கக் கூடியவை என்றும் அறிந்து தெளியும் வல்லமை இருக்கும்.

நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை உள்ள இவர்கள், தீயொழுக்கங்களின் பின் விளைவுகளை எண்ணிப் பார்த்து, உடனே கிடைக்கும் இலாபத்திலும் இன்பத்திலும் மயங்குவதில்லை. தீயொழுக்கம் உடனே இலாபத்தையோ, இன்பத்தையோ தந்த போதிலும், பின்னால் தப்ப முடியாத துன்பத்தையே தரும் என உணர்ந்து, தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடுவதில்லை.

அறத்தில் நம்பிக்கை உள்ள இவர்கள், பழிக்கும் பாவத்திற்கும் தண்டனைக்கும் அஞ்சி, அறமில்லாச் செயல்களைச் செய்ய நாணி

அஞ்சுவர். பிறருக்குத் துன்பம் தரும் தீய செயல்களைச் செய்யார். அன்புள்ளம் கொண்ட இவர்கள், பிறர் துன்பத்தைத் தம் துன்பம்போல் கருதி, துன்பம் வந்தவிடத்தில் உதவுவர்.

இளமையில் இவ்வகையான ஆண், பெண் இருபாலாரிடமும் பணிவு இருக்கும்; வணக்கம் இருக்கும்; நாணம் இருக்கும்; பொறுமையும், தன்னடக்கமும் இருக்கும்; இனிய சுபாவம் இருக்கும். வணக்கத்திற் குரியோரை வணங்கி, மரியாதைக்குரியோருக்கு மரியாதை செய்வார்கள்.

அறத்தில் நம்பிக்கை உள்ள இவர்கள், அறநெறிகளில் நாட்டமுள்ள இளைஞர்களோடும், அறத்தில் முதிர்ந்த முதியோரோடும் நட்பு கொண்டு, தானும் அவர்களைப்போல் அறத்திலும், நன்னெறி ஒழுக்கத்திலும் நிறைவு பெற முயலுவார்கள்.

அறத்தில் நம்பிக்கையுள்ள இவர்களின் மனம் பக்தியை நாடும். தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, பக்தியை வளர்த்துக் கொள்வார்கள். பக்தியில் நாட்டமுள்ள இளைஞர்களோடும், பக்தியில் முதிர்ந்த முதியோரோடும் நட்பு கொண்டு, தானும் அவர்களைப்போல் பக்தியில் நிறைவுபெற முயலுவார்கள்.

இளமையில் கருத்துடன் கல்வியும் தொழிலும் கலைகளும் கற்பார்கள். கல்வியில் நாட்டமுள்ள இளைஞர்களோடும், கல்வி அறிவில் முதிர்ந்த முதியோரோடும் நட்பு கொண்டு, தாமும் அவர்களைப் போல் கல்வி அறிவில் நிறைவு பெற முயலுவார்கள்.

இவர்களுடைய கொள்கைகளும் நோக்கமும் குறிக்கோள்களும் விரும்பத் தக்கனவாகவும், வரவேற்கத் தக்கனவாகவும், இன்பம் தருவனவாகவும் இருக்கும்.

இத்தகைய ஆண்-பெண் இரு பாலாரும், அனுபவ அறிவு இல்லாத இளமையில், பெற்றோரும், பெரியோரும் அனுபவ உணர்ச்சியோடு கூறும் அறிவுரைகளைக் கருத்துடன் கேட்பார்கள். நல்லோரின் நல்லுரைகளை அலட்சியப்படுத்தி உதாசீனம் செய்யமாட்டார்கள்.

கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்து, ஒதுக்க வேண்டியவற்றை ஒதுக்கச்சொல்லி, நாட வேண்டியவற்றை நாடச்

சொல்லி, நல்லோர் உபதேசம் செய்தால், அதனைக் கருத்துடனும் சிந்தனையுடனும் கேட்பார்கள். பெரியோர் கூறும்போதே, குற்றங்களை விட்டுவிடுவார்கள்.

அறத்தில் நம்பிக்கையுள்ள இவர்களை, குற்றங்கள் செய்தால் மனச்சாட்சி உறுத்து மென்பதால், தம் குற்றங் குறைகளை மறைக்காமல், நல்லோரிடம் கூறி, அவற்றிற்குப் பரிகாரம் தேடுவார்கள்.

அறமும் பக்தியும் உடைய இவர்கள் தீயோரிடமிருந்து விலகி, ஒழுக்கமுள்ளவரோடு உறவாடி, நல்லொழுக்கங்களையும், நற்குணங்களையும், நற்பண்புகளையும் கற்று, நல்வழியில் வாழ்க்கை இன்பங்களை நாடுவார்கள்; கல்வியும் பதவியும் பொறுப்பும் தேடுவார்கள்; பொருள் தேடுவார்கள்; பெருமையும் புகழும் செல்வாக்கும் தேடுவார்கள்.

நாண வேண்டிய கருமங்களுக்கு நாணியும், நாண வேண்டாத கருமங்களுக்கு நாணாமலும், அஞ்ச வேண்டிய கருமங்களுக்கு அஞ்சியும், அஞ்ச வேண்டாத கருமங்களுக்கு அஞ்சாமலும் கருத்துடனும் நிதானத்துடனும் சிந்தனையுடனும் முன் யோசனையுடனும் செயல்கள் புரிவார்கள்.

உண்மையையே பேசியும், இனிய சொற்களைப் பேசியும், பிறர் மனம் நோகாமல் பேசியும், பலன் தரும் சொற்களைப் பேசியும், விரும்பத் தக்க சொற்களைப் பேசியும், வரவேற்கத் தக்க சொற்களைப் பேசியும், நாவினால் குற்றங்கள் செய்யாது தம்மைக் காத்துக் கொள்வார்கள்.

இவர்களுடைய எண்ணங்களிலும் சொற்களிலும் செயல்களிலும் அறம் இருக்கும், அன்பு இருக்கும். அவை விரும்பத் தக்கனவாகவும் வரவேற்கத் தக்கனவாகவும், பெருமையும், புகழும் தருவனவாகவும், இன்பமும் சுகமும் தருவனவாகவும் இருக்கும்.

வாழ்வில் உயர்வும், மேன்மையும் தரும் உயர்ந்த குறிக்கோள்களைக் கொண்டவர்களாகவும்; உழைப்பில் நம்பிக்கை உள்ளவர்களாகவும்; தளராத உறுதியுடன் தீவிர முயற்சியில் அதிர்ஷ்டத்தை நாடுபவர்களாகவும் விளங்குவார்கள்.

இளமையில் கருத்துடன் கல்வியும் தொழிலும் கலைகளும் கற்பார்கள். கற்க வேண்டியவற்றைக் கற்று, அறிய வேண்டியவற்றை அறிந்து, சரியான கொள்கைகளைப் பின்பற்றி, விலக்க வேண்டியவற்றை விலக்கி, நாட வேண்டியவற்றை நாடி, நல்லோர் போற்றும் நற்செயல்களைச் செய்வார்கள்.

தீய பழக்கங்களில் புலன் இன்பங்களை நாடாமல், நல்ல பழக்கங்களைக் கற்று, மனக்கட்டுப்பாட்டுடன், நல்லொழுக்க நெறிகளினால் உடல் நலத்தைக் காத்துக் கொள்வார்கள்.

பொறுப்பும் பதவியும் அதிகாரமும் அந்தஸ்தும் செல்வாக்கும் வந்த காலத்தில்; நீதி நெறி தவறாமல், கடமைகளிலே கவனமுள்ளவர்களாகவும், நாவைக் காத்து, மனத்தை அடக்கி, தம் பொறுப்பை உணர்ந்து, எப்போதும் கவனமாய் இருந்து, பாரபட்சம் பாராமல், நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, செய்யத் தகாதவற்றை விலக்கி, செய்யத் தகுந்தவற்றைச் செய்து, நல்லொழுக்கத்தால் தம் பெருமையைக் காத்துக் கொள்வார்கள்.

இத்தகையோர் கண்டிக்க வேண்டியவிடத்தில் கண்டித்து, போற்ற வேண்டியவிடத்தில் போற்றி, புகழ வேண்டியவிடத்தில் புகழ்ந்து, நிந்திக்க வேண்டியவிடத்தில் நிந்திப்பார்கள்.

தம் குடும்ப மேம்பாட்டிற்காக அயராது உழைப்பார்கள். நீதி நெறி தவறாமல் நேர்வழியில் பொருள் தேடுவார்கள். தேடிய போருளை இறுகப் பிடித்துக் காக்காமல், தாமும் அதை அனுபவித்து; மனைவி மக்களுக்காகவும், மற்றும் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் செலவிடுவார்கள். தேடிய பொருளில் ஒரு பகுதியை புண்ணிய கருமங்களுக்குச் செலவிட்டு, மேலும் ஒரு பகுதியை "என் வாழ்விலும் மாறுதல்கள் வரும்; துன்பங்கள் வந்த போது உதவும்," என்று எண்ணிச் சேமித்துக் காப்பார்கள்.

இவர்களின் இல்லற வாழ்க்கை இனிதே நடைபெறும். கணவன் மனைவி இருவரிடமும் அன்பும் அறமும் பக்தியும் உண்டென்பதால், பகைவர்கள் கண்டு பொறாமைப்படும் அளவு, இவர்களின் இல்லற வாழ்க்கை இனிதே நடைபெறும்.

தர்ம உபதேசங்களில் உறுதியான நம்பிக்கையுள்ள இவர்களுக்கு, "அடுத்த உலகிலும்," “வினைப்பயனிலும்" நம்பிக்கை

இருக்கும். "நற்செயலாயினும், தீய செயலாயினும், அதன் பலனை இவ்வுலக வாழ்விலோ, அடுத்த உலக வாழ்விலோ, அனுபவிக்க வேண்டும்" என்பதை அறிவார்கள்.

அடுத்த உலகிலும், வினைப் பயனிலும் நம்பிக்கையுள்ள இவர்கள், "எனக்கும் இங்கே முடிவு உண்டு," "அடுத்த உலகிற்கு என்னோடு வருவது நான் செய்த பாவமும் புண்ணியமும்தான்" என்பதை உணர்ந்து, பாவங்களை விலக்கி, புண்ணிய கருமங்களைச் செய்து, அடுத்த உலகிற்குப் பொருள் தேடிக் கொள்வார்கள்.

அன்பும் அறமும் பக்தியும் கல்வி அறிவும் தன்னடக்கத்துடன் நற்செயல்களும் செய்து, இளமையிலும் இன்புறுவார்கள், இடைப்பருவத்திலும் இன்புறுவார்கள், முதுமையிலும் இன்புறுவார்கள்.

**எவ்வகையான இன்பங்களை இத்தகையோர் பெறுவார்கள்?**

மக்களிடையே இவர்களுக்கு, இளமையிலும் இடைப் பருவத்திலும் முதுமையிலும் புகழும் பெருமையும், செல்வாக்கும் இருக்கும்.

இவர்கள் இளமையில் நல்லொழுக்க நெறிகளால், உடல் நலத்தைக் காத்துள்ளதால், முதுமை வந்த காலத்தில், உடலில் ஆரோக்கியம் இருக்கும். கடும் பிணிகள் இவர்களை வருத்தாது.

இளமையில் நல்வழியில் பொருள் தேடி, ஒரு பகுதியை "துன்பம் வந்த போது உதவும்" எனச் சேமித்துள்ளதால், முதுமை வந்த காலத்தில், வறுமை இவர்களை வருத்தாது.

நல்வாழ்வு வாழ்ந்துள்ள இவர்களை, முதுமை வந்த காலத்தில், மனச்சாட்சி உறுத்தாது. தம் பழைமையை எண்ணி, "நல்வாழ்வு வாழ்ந்துள்ளேன்" என உள்ளம் அமைதி பெற்று மனச்சாந்தி அடைவார்கள்.

நன்னெறிகளும், ஆழமாக வேரூன்றிய பக்தியும் இவர்களிடம் உண்டென்பதால், மரண பயம் இவர்களை வருத்தாது. "வாழ்க்கை நிலையற்றது; எல்லாருக்கும் இங்கே முடிவு உண்டு" என நிலையாமையை உணர்ந்திருப்பதால், மரணத்தை நினைத்து இவர்கள் அஞ்சுவதில்லை.

மரணம் வந்தபோது, இவர்கள் அஞ்சாமல், மனக்குழப்பமில்லாமல், சாந்தியுடன் இறப்பார்கள். அடுத்த உலகில் நற்கதிக்குப் போவார்கள்.

ஆகவே, நன்னெறிகளில் ஒழுகி, உள்ளத்தில் அன்பும் பக்தியும் கொண்டு, நல்வாழ்வு வாழ்வோர் இளமையிலும் இடைப்பருவத்திலும் முதுமையிலும் அடுத்த உலகிலும் சுகம் பெறுவார்கள்.

இவ்வகையான மக்களைப் பற்றி பகவான் புத்தர் இவ்வாறு விளக்கியுள்ளார்:

*கருத்துடைய ஒருவன், விழிப்படைந்து, நினைவு குன்றாமல், நற்கருமங்களைச் செய்து கொண்டும், ஆலோசனையுடன் வினை பயன் புரிந்து கொண்டும், தன்னடக்கத்தோடு தர்மத்தை (தர்ம உபதேசங்களை) அனுசரித்து வந்தால், அவன் புகழ் ஓங்கி வளரும்.*

*அறிஞன் விழிப்படைந்து, கருத்துடனும், நிதானத்துடனும் அடக்கத்துடனும் ஒழுக்கத்துடனும் வெள்ளத்தால் சேதமடையாத ஒரு தீவைப் போல் தன்னைப் பலப்படுத்திக் கொள்கிறான்.*

*அறிவாளி, மடிமையில் ஆழ்ந்தவர் நடுவே முயற்சியுடை யோனாகவும், உறங்குவோர் நடுவே, விழிப்புள்ளவனாகவும் இருப்பான். பந்தயக் குதிரை வாடகைக் குதிரையைப் பிந்தவிட்டு முன்னேறிப் பாய்வதைப் போல், அவன் மற்ற யாவருக்கும் முன்னால் செல்கிறான்.*

*நற்கருமத்தைச் செய்தவன், உலக வாழ்வில் இன்பமடைகிறான். அடுத்த உலகிலும் இன்புறுகிறான்; ஈருலகிலும் அவனுக்கு இன்பமே! தான் செய்த நற்கருமத்தின் விளைவைக் கண்டு அவன் மகிழ்ந்து இன்பமடைகிறான்.*

8

## இளமையில் இன்புற்று, முதுமையிலும், அடுத்த உலகிலும் துன்புறுவோர்

சிலருக்கு நன்னெரிகளில் நாட்டம் இருக்காது. ஆனால், இன்ப நாட்டம் மேலோங்கி நிற்கும். வாழ்க்கை இன்பங்களைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, இன்பங்களுக்காகவே வாழ்வார்கள்.

இத்தகையோருக்குத் தீய பழக்கங்களிலும், தீயொழுக்கங்களிலும், குற்றச் செயல்களிலும் கிடைக்கும் இலாபமும் பொருளும் இன்பமும் கவர்ச்சியாகத் தோன்றும்; தேன் போல் இனிக்கும்; உள்ளம் அவற்றில் இன்புற்று, மகிழ்ந்து அவற்றை நாடும். நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்காமல், தீய பழக்கங்களிலும் தீயொழுக்கங்களிலும் குற்றச் செயல்களிலும் இலாபமும் பொருளும் இன்பமும் தேடுவார்கள்.

நன்னெறிகளில் நாட்டமில்லாத இவர்களுக்கு அறத்திலும், நன்னெறி ஒழுக்க விதிகளிலும் நம்பிக்கை இருக்காது. அறத்தையும், நன்னெறி ஒழுக்க விதிகளையும் உதாசீனப்படுத்துவார்கள், அலட்சியப் படுத்துவார்கள், பரிகசிப்பார்கள், கேலி செய்வார்கள். நன்னெறி ஒழுக்க நெறிகள், பொருளும் இன்பமும் தேடுவோருக்குத் தடையாக இருக்கின்றன, இடையூறாக இருக்கின்றன எனக் கருதுவார்கள்.

"இளமை போனால் மீண்டும் வராது. இளமை உள்ளபோதே வாழ்க்கை இன்பங்களை அனுபவிக்க வேண்டும். நன்னெறிப் பயிற்சிகள் இளமைக்கு ஒவ்வாது, பொருந்தாது. இவை பொருளும், இன்பமும் தேடுவோருக்குத் தடையாக இருக்கின்றன, தடங்கலாக இருக்கின்றன. வாழ்க்கை இனபங்களை அனுபவித்து இன்புற வேண்டிய இளமையில், நன்னெறிகளுக்குக் கட்டுப்பட்டு, அஞ்சி அஞ்சி வாழ்வது மடைமை" என எண்ணுவார்கள்.

“உடலில் முதுமையும் தளர்ச்சியும் வந்த காலத்தில் அறத்தைப் பற்றிச் சிந்திப்போம், நன்னெறிகளைப் பற்றிச் சிந்திப்போம், பக்தியைப் பற்றிச் சிந்திப்போம், மரணத்தைப் பற்றிச் சிந்திப்போம், அடுத்த உலகைப் பற்றிச் சிந்திப்போம். இளமையில் எவ்வளவு இன்பங்களை அனுபவித்து இன்புற முடியுமோ, அவ்வளவையும் அனுபவித்து இன்புறுவோம். எவ்வகையிலேனும் பொருளைத் தேடுவோம்," எனத் தவறான கொள்கைகளைப் பின்பற்றுவார்கள்.

வாழ்க்கை இன்பங்களை நுகர்ந்து இன்புறுவதும், பொருள் தேடுவதும் குற்றமில்லை ஆனால் தவறான கொள்கைகளைப் பின்பற்றி, கெடுதி விளைவிக்கும் தீயொழுக்கங்களில் பொருளும், இன்பமும் தேடுவதே குற்றம் என்பதை இத்தகையோர் அறிவதில்லை. தீயொழுக்கங்களில் பொருளும், இன்பமும் தேடுவோருக்கு புகழ் இல்லை என்பதையும்; தீயொழுக்கம் உடனே இலாபமும் இன்பமும் தந்த போதிலும், பின்னால் தப்ப முடியாத துன்பத்தையே தரும் என்பதையும்; தீயொழுக்கம் இங்கும், உடலைவிட்டு உயிர் பிரிந்த பின் அடுத்த உலகிலும் துன்பம் தரும் என்பதையும் இத்தகையோர் அறிவதில்லை.

நல்லொழுக்கங்களினால் பெறும் இன்பமே உண்மையில் இன்பம் என்பதையும்; நன்னெறிப் பயிற்சிகளினால் தம்மை அடக்கியாண்டு, நல்லொழுக்கங்களின் வழி வாழ்க்கை இன்பங்களை நாடுவோர் என்றென்றும் இன்புறுவர் என்பதையும் இவர்கள் அறிவதில்லை.

வாலிபத் துடிப்பில், தவறான கொள்கைகளைப் பின்பற்றி, கருத்தில்லாமல் சிந்தனையில்லாமல், முன் யோசனையில்லாமல், பின் விளைவுகளை எண்ணிப் பார்க்காமல், நன்மை தீமைமளைச் சீர் தூக்கிப் பார்க்காமல், தன்னடக்கமில்லாமல், புலன் இன்பங்களை நாடுவார்கள்; தீய பழக்கங்களிலும், தீயொழுக்கங்களிலும் வாழ்க்கை இன்பங்களை நாடுவார்கள்; அறமிலாச் செயல்களின் வழி பொருளையும் இலாபத்தையும் பதவியையும், அதிகாரத்தையும் தேடுவார்கள். இத்தகையோர். வாழ்க்கை இன்பங்களைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, இன்பங்களுக்காகவே வாழ்வார்கள்.

மது எங்கே, மாது எங்கே, பாட்டு எங்கே, நடனம் எங்கே, கச்சேரி எங்கே, சந்தை எங்கே, என கேளிக்கைகளில் இன்பங்களை

நாடுவார்கள்.

மதுவிலும், போதைப் பொருட்களிலும், பகட்டிலும், ஆடம்பரத்திலும், உண்பதிலும், உடுத்துவதிலும் இன்பத்தை நாடுவார்கள்.

நெறி தவறி, ஒழுக்கமில்லாமல், தகாத முறையில் காமத்தில் இன்பத்தை நாடுவார்கள்.

நன்னெறியில் நாட்டமில்லாத இவர்களை, குற்றங்கள் செய்யும்போது மனச்சாட்சி உறுத்துவதில்லை என்பதால், தம் சுகத்தை நாடி, தம்மைப் போல் சுகத்தை நாடும் பிற உயிர்களுக்குத் துன்பம் இழைப்பார்கள்.

பிறரை வருத்தி, பிறருக்குத் துன்பம் செய்து, பொய்யும், களவும், சூதும், வஞ்சனையும் சூழ்ச்சியும், செய்து பொருள் தேடுவார்கள். பதவியும், அதிகாரமும் தேடுவார்கள்.

நாவடக்கமில்லாமல், பொய்யும் புறமும் கடுஞ்சொற்களையும், வெறுக்கும் சொற்களையும் பயனற்ற சொற்களையும் பிறர் மனம் நோகும் சொற்களையும் பேசுவார்கள்.

இவர்களின் எண்ணங்களிலும், சொற்களிலும், செயல்களிலும் அறம் இருக்காது. அவை வெறுக்கத் தக்கதாகவும், விரும்பத் தகாததாகவும், பழியையும் பாவத்தையும் தருவதாகவும், துயரமும் வேதனையும் துன்பமும் தருவதாகவும் இருக்கும்.

நன்மை தீமைகளைச் சீர் தூக்கிப் பார்க்காமல், பொருளும் இன்பமும் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்ட இவர்களுடைய கொள்கைகளும் நோக்கமும் குறிக்கோள்களும் வெறுக்கத் தக்கதாகவும், விரும்பத் தகாததாகவும், துன்பம் தருவதாகவும் இருக்கும்.

நன்னெறிகளில் நாட்டமில்லாத இவர்கள், தம்மைப்போல் ஒழுக்கமில்லா இளைஞர்களோடும், ஒழுக்கமில்லா முதியோரோடும் உறவாடுவார்கள். துஷ்டர்களோடு சேர்ந்து துஷ்டச் செயல்களைச் செய்வார்கள். தம் இலாபத்திற்காகப் பிறருக்குத் துன்பம் செய்யத் தயங்கமாட்டார்கள்.

நாண வேண்டிய கருமங்களுக்கு நாணாமல், அஞ்ச வேண்டிய கருமங்களுக்கு அஞ்சாமல், குற்றச் செயல்களில் பொருளும் இன்பமும் தேடுவோரைக் கெட்டிக்காரர்கள் என்றும், திறமை சாலிகள் என்றும், பொருளும் இன்பமும் தேடத் தெரிந்தவர்கள் என்றும், வாழ்க்கை இன்பங்களை நுகரத் தெரிந்தவர்கள் என்றும் கருதுவார்கள்.

நாண வேண்டிய கருமங்களுக்கு நாணி, அஞ்ச வேண்டிய கருமங்களுக்கு அஞ்சி, பழி பாவங்களுக்கு அஞ்சி, நன்னெறிப் பயிற்சியினால் தம்மை அடக்கி ஆண்டு, ஒழுக்க விதிகளின்படி ஒழுகுவோரை, பொருளும் இன்பமும் தேடத் தெரியாதவர்கள் என்றும், துணிச்சல் இல்லாதவர்கள் என்றும், திறமை இல்லாதவர்கள் என்றும், சாமர்த்தியமில்லாதவர்கள் என்றும், வாழ்க்கை இன்பங்களை நுகரத் தெரியாதவர்கள் என்றும் கருதுவார்கள்.

நன்னெறிகளில் நாட்டமில்லாத இவர்களிடம் அறத்தையும், நன்னெறி ஒழுக்கங்களையும் பேசினால் கோபமடைவார்கள், சினம் கொள்வார்கள், பகைமை பாராட்டுவார்கள், சிடுசிடுவென முகத்தில் வெறுப்பைக் காட்டுவார்கள், உதாசீனப்படுத்துவார்கள், அலட்சியப்படுத்துவார்கள்.

அறத்தில் நம்பிக்கையில்லாத இவர்களிடம் சரியான பக்தி இருக்காது. அப்படியே பக்தியில் நாட்டம் இருந்தாலும், தவறான போதனைகளை நம்பி, தவறான கொள்கைகளைப் பின்பற்றி, உண்மை இல்லாத இடத்தில் உண்மையைக் கண்டு, தவறான பக்தியை மேற்கொள்வார்கள்.

அறத்திலும், நன்னெறிகளிலும் நாட்டமில்லாத இவர்களுக்கு நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் நுண்ணறிவு இருக்காது. நன்மை பயக்கக்கூடியவை எவை, கெடுதி விளைவிக்கக்கூடியவை எவை என அறிந்து தெளியும் வல்லமை இருக்காது. நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை இல்லாத இவர்களுக்கு அறிவுரை கூறினால் கோபமடைவார்கள், சினங்கொள்வார்கள், பகைமை பாராட்டுவார்கள், சிடுசிடுவென முகத்தில் வெறுப்பைக் காட்டுவார்கள், உதாசீனம் செய்வார்கள். அலட்சியப் படுத்துவார்கள்.

இவ்வகையைச் சேர்ந்த ஆண் - பெண் இரு பாலாரிடமும் வாலிபப் பெருமை இருக்கும்; மயக்கமும் மறதியும் இருக்கும்; ஆணவமும் அகந்தையும் கர்வமும் தற்பெருமையும் இருக்கும்; அலட்சிய மனப்பான்மையும், பொறுப்பின்மையும் இருக்கும். அறியாமையில் ஆழ்ந்து வாழ்க்கை இன்பங்களைத் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, தவறான கொள்கைகளைப் பின்பற்றி, கெடுதி விளைவிக்கும் தீயொழுக்கங்களில் பொருளும் இன்பமும் பதவியும் அதிகாரமும் தேடுவார்கள்.

இவர்கள் வணக்கத்துக்குரியோரை வணங்குவதில்லை; மரியாதைக்குரியோருக்கு மரியாதை செய்வதில்லை; நல்ல அறிவுரைகளைக் கேட்பதில்லை; நலம் தரும் நல்லுபதேசங்களைக் கருத்துடன் கேட்பதில்லை.

அனுபவ உணர்வோடு பெற்றோரும், பெரியோரும் கூறும் அறிவுரைகளை அலட்சியப் படுத்துவார்கள், உதாசீனப்படுத்துவார்கள், புறக்கணிப்பார்கள். குற்றங்களைக் கண்டித்து, விலக்க வேண்டியவற்றை விலக்கச் சொல்லும் நல்லோரை வெறுப்பார்கள்.

குற்றங்களைக் கண்டித்து அறிவுரை கூறுவோரை, " குறை காண்பதிலேயே நாட்டமுள்ளவர்கள்; எல்லாவற்றிலும் தீமையையே காண்பவர்கள்; வாழ்க்கை இன்பங்களை நுகரத் தெரியாதவர்கள்; அஞ்சி அஞ்சி வாழ்பவர்கள்." எனக் கருதி, நல்லோரின் அறிவுரைகளையும், கண்டிப்பையும் வெறுத்து, நல்லொழுக்கமுள்ள நல்லோரோடு நட்பும், விசுவாசமும் கொள்வதில்லை.

வணக்கத்திற்கும், மரியாதைக்கும், நட்புக்கும் தகுதியற்ற தீயோருக்கு வணக்கமும், மரியாதையும் செய்து, அவர்களிடம் நட்பும், விசுவாசமும் கொள்வார்கள். தீயோரின் ஆசை மொழிகளில் மயங்கி, அவர்களின் தவறான ஆலோசனைகளைப் பின்பற்றுவார்கள்.

இவ்வகையினர். இளமையில் கருத்துடன் கல்வியும், தொழிலும், கலைகளும் கற்பதில்லை. அப்படியே கல்வியும், தொழிலும் கற்றாலும், பொறுப்பும் பதவியும் பெற்ற காலத்தில், நன்னெறிகளில் நாட்டமில்லாத இவர்கள், அறமிலாச் செயல்களைச் செய்து கெடுவார்கள்.

இவர்களுடைய இல்லற வாழ்வில் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்காது. ஏன்? இல்லற வாழ்க்கை இனிதே நடைபெற வேண்டுமென்றால், கணவன் - மனைவி இருவரிடமும் அன்பும் அறமும் இருக்க வேண்டும். இருவரும் ஒருவரை ஒருவர் நம்பி, தத்தம் கடமைகளை உணர்ந்து, பொறுப்புகளை உணர்ந்து, கருத்தொருமித்துக் குடும்பம் நடத்த வேண்டும். இருவரிடமும் நாணம், பணிவு, வணக்கம், தன்னடக்கம் ஆகியவை இருக்க வேண்டும். இருவரிடமும் பக்தியும், இல்லற வாழ்விற்குரிய நற்குணங்களும், நற்பண்புகளும் இருக்க வேண்டும்.

இவை யாவும் நன்னெறிப் பயிற்சிகளினால் பெறக் கூடியவை. நன்னெறிகளில் நாட்டமில்லாத இவர்களிடம், இச்சிறப்புகள் இருக்காதென்பதால், இவர்களுடைய இல்லற வாழ்க்கை இனிதே நடைபெறாது.

இன்பங்களைத் தேடுவதையே குறிக் கோளாகக் கொண்டு, இன்பங்களுக்காகவே வாழும் இவர்கள், வாலிபப் பெருமையில், வாலிப மயக்கத்தில், "இளமை நிலையானது அல்ல," "எனக்கும் முதுமை வரும்," “எனக்கும் வியாதி வரும்," "நானே என் செயல்களுக்கு வாரிசு," "இளமையில் செய்யும் குற்றங்கள் முதுமையில் வருத்தும்," "எனக்கும் மரணம் வரும்," "அடுத்த உலகுக்கு என்னோடு வருவது நான் செய்த பாவமும் புண்ணியமும்தான்." என்பதை மறந்துவிடுவார்கள்.

பொருளும் இன்பமும் தேடுவதையே குறிக்கோளாகக் கொண்டு, கருத்தில்லாமல் சிந்தனையில்லாமல் முன் யோசனையிலாமல், பின் விளைவுகளை எண்ணிப் பாராமல், நன்மை-தீமைகளைச் சீர்தூக்கிப் பாராமல், பழி பாவத்திற்கு அஞ்சாமல், தீயொழுக்கங்களிலும், பாவச் செயல்களிலும், பொருளும் இன்பமும் தேடுவார்கள்.

பாவம் உடனே பழுப்பதில்லை என்பதையும்; பாவம் பழுக்காத வரை இன்பமாய்த்தான் இருக்கும் என்பதையும்; பாவம் பழுத்துத் துன்பப் பலனைத் தரும்போது, அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது என்பதையும், இத்தகையோர் இளமையில் அறிவதில்லை.

பாவம் உடனே பழுப்பதில்லை என்பதால், இவர்களுக்குப் பொருளும் இன்பமும் வந்து சேரும். பாவச் செயல்களில் கிடைக்கும்

இலாபத்திலும், இன்பத்திலும் மயங்கி, தங்களைத் திறமைசாலிகள் என்றும், சாமர்த்தியக்காரர்கள் என்றும் கருதி, மீண்டும் மீண்டும் பாவ கருமங்களைச் செய்து, சிறுகச் சிறுகப் பாவத்தினால் நிரம்பிவிடுவார்கள்.

நாம் ஒரு பானையைக் குழாயின் அடியில் வைத்து நீர் சொட்டுச் சொட்டாக விழுமாறு செய்தோமென்றால், பானை உடனே நிறைவதில்லை. ஏன்? நீர் சொட்டுச் சொட்டாக விழுகிறது. நீர் சொட்டுச் சொட்டாக விழுவதால், பானை நிறைவதற்குக் காலம் எடுக்கும்.

அதுபோல், இவர்கள் சிறுகச் சிறுகச் செய்யும் பாவங்கள் பழுக்கக் காலம் பிடிக்கும். பாவம் பழுக்காத வரை, அதைத் தேன் என விரும்புவார்கள். மீண்டும் மீண்டும் பாவ கருமங்களில் இன்பங்களை நாடுவார்கள்.

சொட்டுச் சொட்டாக விழும் நீரினால் பானை நிறைவது போல், இவர்கள் சிறுகச் சிறுகப் பாவங்களைச் செய்து, பாவங்களினால் நிரம்பிவிடுவார்கள். அப்போது பாவ கருமங்கள் பழுத்துத் துன்பப் பலனைத் தரும். ஆறாத் துயரம் இவர்களைப் பற்றிக் கொள்ளும்.

வாலிப மயக்கத்தில் இவர்கள் செய்த பாவங்கள் பழுக்கும் தறுவாயில், இளமை மறைந்து, இடைப் பருவத்தையோ முதுமைப் பருவத்தையோ அடைந்திருப்பார்கள். இளமையில் தீயொழுக்கங்களிலும், பாவச் செயல்களிலும், பொருளும் இன்பமும் தேடி களிப்புற்ற இவர்களை, முதுமையில் துன்பங்கள் சூழ்ந்து கொள்ளும்.

**எவ்வகையான துன்பங்கள் இத்தகையோரை வருத்தும்?**

இளமையில், "எனக்கும் வியாதி வரும்," என்பதை மறந்து, தன்னடக்கமில்லாமல், தீயொழுக்கங்களிலும், பாவச் செயல்களிலும் புலன் இன்பங்களை நாடிக் களிப்புற்ற இவர்களை உடலுக்கு முதுமையும் தளர்ச்சியும் வந்த காலத்தில், கடும் பிணிகள் வருத்தும்.

இளமையில் தீயொழுக்கங்களில் புலன் இன்பங்களை நாடிக் களிப்புற்ற இவர்களின் மனமும் உடலும், அப்பழக்கங்களுக்கு அடிமையாகி, முதுமை வந்த காலத்திலும், தீயொழுக்கங்களில் புலன் இன்பங்களை நாடும். "தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை" என்பது

போல், முதுமை வந்த காலத்திலும், கடும்பிணிகள் உடலை வருத்திய போதிலும், புலன் இன்பங்களுக்காக ஏங்கி, தீயொழுக்கங்களில் அவற்றை நாடுவார்கள். உடலில் பிணிகள் பெருகும். வேதனையும் துன்பமும் துயரமும் இவர்களை வருத்தும்.

இளமையில் இவர்கள் பலருக்குக் கேடு செய்துள்ளதால், முதுமையில் பகைமையும், அச்சமும் இவர்களை வருத்தும். 'பகைவர்கள் ஏதும் நமக்குக் கேடு செய்வார்களோ!" என அஞ்சுவார்கள். பகைவர்கள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்து, இவர்களுக்குத் துன்பம் கொடுப்பார்கள், கேடு செய்வார்கள்.

பாவ கருமங்கள் பழுக்கும்போது, இரகசியமாகவோ சிலர் அறியவோ, இவர்கள் செய்துள்ள குற்றங்களை அதிகாரிகள் அறிந்து, நடவடிக்கை எடுத்து, விசாரித்துத் தண்டனை வழங்குவார்கள்.

இவர்கள் பிறரை வருத்தி, பொய்யும் களவும் சூதும் வஞ்சனையும் செய்து தேடிய பொருள், பாவங்கள் பழுக்கும் போது, இவர்கள் அழ - அழ கைவிட்டுப் போகும்.

நஷ்டத்தால் பொருளை இழப்பார்கள்; அதிகாரிகள் தண்டித்துப் பொருளைக் கைப்பற்றுவார்கள்; கள்வர்கள் பொருளைக் களவாடிச் செல்வார்கள்; பகைவர்கள் பொருளை அழிப்பார்கள்; கடும் பிணிகளால் பொருளை இழப்பார்கள்; திறமையற்ற வாரிசுகள் பொருளை அழிப்பார்கள்; நெருப்பாலும் வெள்ளத்தாலும் பொருளை இழப்பார்கள்.

இளமையில் பெரியோரை மதியாமல், அவர்களின் நல்லுரைகளைக் கேட்காமல், நன்னெறிப் பயிற்சிகளினால் தன்னை அடக்கி ஆளாமல், தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடி முதுமையில் துன்புறுபவனைக் கண்டு, உலகம் பரிதாபப் படாது. மாறாக, "இவன் இளமையில் பெரியோரை மதியாமல், அவர்களின் நல்லுரைகளைக் கேளாமல், தன்னடக்கமில்லாமல், 'நான்' எனும் அகந்தையில், பாவங்களைச் செய்தான். முதுமையில் வறுமையும், பிணியும், பகைமையும் பழியும், பாவமும், அச்சமும் இவனை வருத்துகின்றன. இவை யாவும் இவன் தனக்குத் தானே தேடிக்கொண்ட துன்பங்கள்" என உலகம் இவனைப் பழிக்கும்.

குற்றச் சாட்டுகளும், சண்டை சச்சரவுகளும் இவர்களின் குடும்பத்தை அழிக்கும்.

துன்பம் சூழ்ந்து கொண்டபோது, வாலிபப் பெருமையில் செய்த குற்றங்களை எண்ணி எண்ணிப் பரிதவிப்பார்கள்.

பாவச் செயல்களைச் செய்துள்ள இவர்கள், " அடுத்த உலகில் என் கதி என்னவோ" என மரணத்தை நினைத்து அஞ்சுவார்கள்.

மரணம் வந்தபோது, உள்ளம் நடுங்கி, புலம்பிப் பிதற்றி இறப்பார்கள்.

உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகில் நரகத்திலோ மிருகமாகவோ அசுரராகவோ பேயாகவோ பிறந்து துன்புறுவார்கள்.

ஆகவே, இளமையில் நன்னெறிகளால் தம்மை அடக்கியாளாமல், தீயொழுக்கங்களிலும், பாவச் செயல்களிலும் வாழ்க்கை இன்பங்களை நாடுவோர், இளமையில் இன்புற்ற போதிலும் இடைப் பருவத்திலும், முதுமையிலும் துன்புறுவார்கள். உடலை விட்டு உயிர் பிரிந்த பின், அடுத்த உலகிலும் துன்புறுவார்கள்.

ஆகவே, வாலிபப் பெருமையில், நல்லொழுக்க நெறிகளையும், பெரியோர் அனுபவ உணர்வோடு கூறும் அறிவுரைகளையும் அலட்சியப் படுத்தி, தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடி, குற்றச் செயல்களைச் செய்யும் இளைஞர்கள், தம்மைத் தாமே எச்சரித்துக் கொள்ள வேண்டும்.

"இப்போது நான் குற்றங்கள் செய்தேனென்றால், பின்னால் என்னையும் இது போன்ற துன்பங்கள் வருத்தும்."

இவ்வாறு தம்மைத் தாமே எச்சரித்து, இளமை மயக்கத்திலிருந்து விழிப்புற்று, தீயொழுக்கங்களையும், குற்றச் செயல்களையும் விட்டுவிட வேண்டும்.

9

## இளமையில் துன்புற்று, முதுமையிலும், அடுத்த உலகிலும் இன்புறுவோர்

சிலருக்கு இளமையில் நன்னெறிகளின் நம்பிக்கை இருந்த போதிலும், மனம் தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடும். தீயொழுக்கங்களில் கிடைக்கும் இலாபத்திலும் இன்பத்திலும் மயங்கி, மனம் தவற்றை நாடும்.

மனம் தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடிய போதிலும், இவர்களுக்கு நன்னெறிகளில் நம்பிக்கை உண்டென்பதால், நன்மை - தீமைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பார்கள். முன் யோசனையுடன் பின் விளைவுகளை எண்ணிப் பார்ப்பார்கள். தீயொழுக்கம் உடனே இலாபத்தையோ, இன்பத்தையோ, தந்த போதிலும், பின்னால் பழியையும், பாவத்தையும் தண்டனையையும் தரும் என அறிவார்கள். பழிக்கும் பாவத்திற்கும் தண்டனைக்கும் அஞ்சுவார்கள். பின்னால் வரும் துன்பத்திற்கு அஞ்சி, குற்றச் செயல்களில் இலாபத்தையும், இன்பத்தையும் நாடும் மனத்தைத் தடுத்து நிறுத்திப் போராடுவார்கள்.

உதாரணத்திற்கு, சில சமயங்களில், பிறர் பொருளை அபகரித்து ஒரு இலாபத்தைப் பெற சந்தர்ப்பங்கள் வரும். இத்தகையோரின் மனம், அப்போது கிடைக்கும் இலாபத்தில் மயங்கித் திருடத் தூண்டும். மனம் திருடத் தூண்டிய போதிலும், இவர்களுக்கு நன்னெறிகளில் நம்பிக்கை உள்ளதென்பதால், நன்மை-தீமைகளைச் சீர்தூக்கிப் பார்ப்பார்கள்.

"திருடுவது குற்றம். களவாடிப் பெறும் இலாபத்திற்குப் புகழ் இல்லை. களவு நமக்கு ஓர் இலாபத்தைத் தந்த போதிலும், அது பிறருக்குத் துன்பத்தைத் தரும். பின்னால் நமக்கும் தப்ப முடியாத துன்பத்தையே தரும்" என அறிந்து, தவற்றை நாடும் மனத்தைத் தடுத்து

நிறுத்துவார்கள். சில சமயங்களில், தீயொழுக்கங்களில் கிடைக்கும் இலாபத்திலும், இன்பத்திலும் மயங்கித் தவற்றைச் செய்வார்கள்.

இன்ப நாட்டம் மேலோங்கியும், அனுபவ அறிவு குன்றியுமுள்ள இளமைப் பருவத்தில், தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடும் மனத்தைத் தடுத்து நிறுத்தி, நன்னெறிகளில் செலுத்துவது எளிதன்று. இன்பங்களைத் தேடுவதையே, குறிக்கோளாகக் கொண்டு, இன்பங்களுக்காகவே வாழும் மக்களிடையே, இன்பங்களை நாடி ஓடும் மனத்தை அடக்கி ஆள்வது அவ்வளவு எளிதான செயலன்று. அதுவும், இன்பங்களை நுகரத் துடிக்கும் இளமைப் பருவத்தில், பின் விளைவுகளை எண்ணிப் பார்த்து, உடனே கிடைக்கும் இலாபத்தையும், இன்பத்தையும் கைவிடுவதென்பது ஒரு சிரமமான போராட்டமாகவே இருக்கும்.

பழிக்கும் பாவத்திற்கும் தண்டனைக்கும் அஞ்சி, தவற்றை நாடும் மனத்தைத் தடுத்து நிறுத்தப் போராடும் இவர்களுக்கு:

உலகெல்லாம் இன்புற்றிருக்க, தான் மட்டும் தன்னைத் தானே வருத்திக் கொள்வது போல் தோன்றும்.

நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பாராமல், பொருளும், இன்பமும் தேடுவோரெல்லாம் இன்புற்றிருக்க, தான் மட்டும் அஞ்சி அஞ்சி வாழ்வது போல் தோன்றும்.

வாழ்க்கை இன்பங்கள் கை நழுவிப் போவது போல் தோன்றும். கைக்கு வந்த இலாபமும், பொருளும், கை நழுவிப் போவது போல் தோன்றும்.

ஒழுக்கமில்லாதோர் இனிய சொற்களைப் பேசி மயக்குவார்கள்; ஆசை மொழிகளைப் பேசி மயக்குவார்கள்: ஆசை காட்டி மயக்குவார்கள்; இலஞ்சம் கொடுத்து மயக்குவார்கள்; தகாத செயல்களைச் செய்யும்படித் தூண்டுவார்கள். தீயொழுக்கங்களில் நாட்டமுள்ள மனம் இவற்றில் எல்லாம் மயங்கி, பலவந்தமாக அவற்றை நாடும்.

இவற்றிற்கெல்லாம் மயங்காவிட்டால் கட்டாயப் படுத்துவார்கள்; பயமுறுத்துவார்கள்; பொய்க்குற்றச் சாட்டுகளைச் சாட்டுவார்கள்;

நட்டத்தை ஏற்படுத்துவார்கள், துன்பத்தைக் கொடுப்பார்கள்; பகையும் அச்சமும் வேதனையும் உள்ளத்தை வருத்தும்.

நண்பனும் பகைவனாவான்; மனைவியும் சலித்துக் கொள்வாள்; உறவினர்களும் குறை கூறுவார்கள். திறமையில்லாதவன், சாமர்த்தியமில்லாதவள், துணிச்சல் இல்லாதவன், பொருள் ஈட்டத் தெரியாதவன் எனக் குறை பேசுவார்கள்.

அழுகை வரும்; கண்களில் கண்ணீர் பெருகும்; மனம் குழம்பிச் சஞ்சலமடையும்; நன்னெறிகளில் உள்ளம் சோர்ந்து தளர்ச்சியடையும்.

"இவ்வளவு துன்பங்களுக்கும் காரணம் நன்னெறிப் பயிற்சிகள்தாம்," என மனம் நன்னெறிகளைக் குறை கூறி, நன்னெறி ஒழுக்கங்களைப் புறக்கணிக்கத் தூண்டும்.

"பின் விளைவுகளை எண்ணி, இப்போது கிடைக்கும் இலாபத்தையும், இன்பத்தையும் ஏன் கைவிட வேண்டும். பொருளும் இலாபமும் பெறுவதற்கு கிடைத்துள்ள இவ்வாய்ப்பை விட்டுவிட்டோமென்றால், மீண்டும் எப்போது இத்தகைய வாய்ப்புக் கிடைக்கும்?

"துன்பம் வந்த காலத்தில் அப்போது பரிகாரத்தைத் தேடிக் கொள்ளலாமே! முதுமை வந்த காலத்தில் அறத்தைப் பற்றிச் சிந்திப்போம், நன்னெறிகளைப் பற்றிச் சிந்திப்போம், பக்தியைப் பற்றிச் சிந்திப்போம், பாவ புண்ணியங்களைப் பற்றிச் சிந்திப்போம். இளமை உள்ள இந்தக் காலத்தில், வாழ்க்கை இன்பங்களை நுகர்ந்து இன்புறுவோம். பொருளையும் பதவியையும் அதிகாரத்தையும் தேடுவோம்" என மனம் எண்ணி, தீயொழுக்கங்களில் பொருளும் இன்பமும் பதவியும் அதிகாரமும் தேடத் தூண்டும்.

ஆகவே, தீயொழுக்கங்களில் கிடைக்கும் இலாபத்திலும் இன்பத்திலும் மயங்கி, தவற்றை நாடும் மனத்தை, நன்னெறிகளால் தடுத்து நிறுத்துவது அவ்வளவு எளிதான செயலன்று.

இருப்பினும், இத்தகையோருக்கு நன்னெறிகளில் நம்பிக்கை உண்டென்பதால், நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, பின்

விளைவுகளை எண்ணிப் பார்த்து, பழிக்கும் பாவத்திற்கும் தண்டனைக்கும் அஞ்சி அறத்திற்காகப் போராடுவார்கள். துயரமும், துன்பமும், வேதனையும் வந்த போதிலும், அழுகையும், கண்ணீரும் வந்த போதிலும், கண்ணீரும் கம்பலையுமாய் அற வழியில் நடப்பார்கள்.

சில சந்தர்ப்பங்களில், தீயொழுக்கங்களில் உடனே கிடைக்கும் இலாபத்திலும், இன்பத்திலும் மயங்கி தவற்றை நாடும் மனத்தைத் தடுத்து நிறுத்த முடியாமல் குற்றங்கள் செய்வார்கள். செய்த பின் மனச்சாட்சி இவர்களை உறுத்தும். வேதனையும் துயரமும் அடைவார்கள். மீண்டும் இக்குற்றங்களைச் செய்யக்கூடாது என உறுதி பூண்டு, அறத்திற்காகப் போராடுவார்கள்.

அறவழியானது கற்களும் பாறைகளும் குழிகளும் நிறைந்த பாதையாகவும்; வழுக்கும் பாதையாகவும்; மண்ணும், சேறும் நிறைந்த பாதையாகவும் காணப்படும். வழுக்கும் நிலத்தில் நடப்பவனுக்கு ஊன்றுகோல் துணை நிற்பது போல், அறத்தில் உள்ள நம்பிக்கையும், பக்தியும், தீயொழுக்கம் பின்னால் துன்பம் தரும் எனும் அச்சமும் இவர்களுக்கு ஊன்றுகோல் போல் துணை நிற்கும்.

நன்னெறிகளில் நாட்டமுள்ள இவர்கள், அனுபவ உணர்ச்சியோடு பெரியோர் கூறும் அறிவுரைகளைக் கருத்துடன் கேட்பார்கள். தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்பார்கள். நன்னெறிகளைக் கல்வி கேள்வியால் கற்பார்கள். குற்றங்களைக் கண்டித்து, விலக்க வேண்டியவற்றை விலக்கச் சொல்லும் நல்லோரையும், அவர்களின் அறிவுரைகளையும் வரவேற்பார்கள். தம்மிடம் உள்ள குற்றங் குறைகளைத் தேடிப் பார்த்து, அவற்றை விலக்கப் போராடுவார்கள்.

தம்மிடம் உள்ள குற்றங் குறைகளை மறைக்காமல், நன்னெறி ஒழுக்கமுள்ள நல்லோரிடம் கூறி, அவற்றுக்குப் பரிகாரம் தேடுவார்கள். குற்றங்களை விலக்கும் மார்க்கங்களை அறிந்து, குற்றங்களை விலக்கப் போராடுவார்கள்.

கல்வியில் நாட்டமுள்ள இளைஞர்களோடும், கல்வியில் முதிர்ந்த முதியோரோடும், நட்பு கொண்டு, தாமும் அவர்களைப் போல் கல்வியைப் பெற முயலுவார்கள்.

அறமும், நல்லொழுக்கமும் உடைய இளைஞர்களோடும், அறத்தில் முதிர்ந்த பெரியோரோடும் நட்பு கொண்டு, தாமும் அவர்களைப் போல் அறத்தில் நிறைவு பெற முயலுவார்கள்.

பக்தியுள்ள இளைஞர்களோடும், பக்தியில் முதிர்ந்த முதியோரோடும் நட்புறவு கொண்டு, தாமும் பக்தியில் நிறைவு பெற முயலுவார்கள்.

தீய பழக்கங்களிலும், தீயொழுக்கங்களிலும், புலன் இன்பங்களை நாடி, அப்பழக்கங்களுக்கு அடிமையாகி அல்லல் படுவோரைக் காணும்போது, "எனக்கும் இக்கதிதான்" என எண்ணி, தீய பழக்கங்களிலும், தீயொழுக்கங்களிலும், புலன் இன்பங்களை நாடும் மனத்தைத் தடுத்து நிறுத்தி, நலந்தரும் நல்ல பழக்கங்களுக்காகப் போராடுவார்கள்.

பாவ கருமங்களில் பொருளும் இன்பமும் தேடினோர், பாவம் பழுத்துத் துன்பப்பலனைத் தரும்போது, அழுது புலம்பி, துன்புறுவதைக் காணும்போது, "நானே என் செயல்களுக்கு வாரிசு, பாவம் பழுக்கும்போது, அதன் பிடியிலிருந்து தப்ப முடியாது," என அறிந்து, அறமிலாச் செயல்களில் இலாபத்தையும், இன்பத்தையும் நாடும் மனத்தைத் தடுத்து நிறுத்தி, நல்வழியில் பொருளும் இன்பமும் தேடுவார்கள்.

கற்க வேண்டியவற்றைக் கற்கவும், அறிய வேண்டியவற்றை அறியவும், நாட வேண்டியவற்றை நாடவும், தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்க்கவும், செய்யத் தக்கவற்றைச் செய்யவும் போராடுவார்கள்.

தவற்றை நாடும் மனத்தை நிதான உணர்வினால் காத்து நன்மை தீமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி, கருத்துடனும், சிந்தனையுடனும், முன் யோசனையுடனும் செயல்களைப் புரிவார்கள்.

தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடும் மனத்தை நன்னெறிப் பயிற்சிகளினால், தடுத்து நிறுத்தி, நன்னெறிகளுக்காகப் போராடும் இவர்களுக்கு, இளமையில் வாழ்க்கை துன்பமாகவே இருக்கும்.

உதாரணத்திற்கு, இவ்வுலக இன்பங்களையும், நீண்ட வாழ்வையும் விரும்பும் ஒரு மனிதருக்கு, மஞ்சள் காமாலை நோய் வந்து விட்டதாகக் கொள்வோம்.

நீண்ட ஆயுளையும், இவ்வுலக இன்பங்களையும் விரும்பும் இவர் இப்படிச் சிந்திப்பார்:

'நம் உடல் மஞ்சள் காமாலை நோயினால் பீடிக்கப்பட்டுவிட்டது. இவ்வியாதி சிறுகச் சிறுக உடலைப் பாதித்து, பெரும் துன்பத்தைக் கொடுத்து மரணத்தை ஏற்படுத்தும். உடலில் இவ்வியாதி முற்றி, மரணத்தை ஏற்படுத்துவதற்கு முன், நாம் இதற்கு மருத்துவம் தேட வேண்டும்," என எண்ணி, மஞ்சள் காமாலை நோய்க்கு மருத்துவம் அறிந்த மருத்துவரை தேடிப்போவார்.

மருத்துவர் அவரிடம் "ஐயா, உங்கள் உடலை மஞ்சள் காமாலை பீடித்துள்ளது. மஞ்சள் காமாலை நோயைக் குணப்படுத்தும் மருந்து என்னிடம் உண்டு. இம்மருந்தின் மணமும் சுவையும் இன்பம் தருவனவாக இருக்காது. அவை விரும்பத் தகாததாகவும், வெறுக்கத் தக்கதாகவுமே இருக்கும்."

'அருந்தும்போது இம்மருந்து பெரும் வேதனை தரும். குமட்டல் வரும். வாந்தி வரும். மரணமே வருவது போன்ற துன்பத்தைத் தரும்."

'இம்மருந்தைக் காலையிலும் நண்பகலிலும் மாலையிலும் அருந்த வேண்டும். மருந்தை முறையாக அருந்தி வந்தீர்களென்றால், தங்கள் உடலைப் பீடித்துள்ள மஞ்சள் காமாலை நோய் படிப்படியாகக் குறைந்து குணமடைவீர்கள்," எனக் கூறுவார்.

மருத்துவர் மருந்தின் தன்மையையும், அதை உட்கொள்ளும் முறைகளையும், விளக்கிக்கூறி, மஞ்சள் காமாலை நோயினால் பீடிக்கப் பட்டுள்ள மனிதருக்கு மருந்து கொடுப்பதாகக் கொள்வோம்.

மருந்தின் மணமும் சுவையும், வேதனையும், துன்பமும் தருவதாக இருந்த போதிலும்; அருந்தும்போது குமட்டலும் வாந்தியும் வந்த போதிலும்; மரணமே வருவது போன்ற துன்பத்தைத் தந்த போதிலும்; மஞ்சள் காமாலை நோயினால் பீடிக்கப்பட்ட மனிதர், இவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல், மருத்துவர் கூறியது போல், அன்றாடம் காலையிலும், நண்பகலிலும், மாலையிலும் மருந்தை

அருந்தி வந்தாரென்றால், உடலில் உள்ள நோய் சிறுகச் சிறுகக் குறைந்து, நாளடைவில் குணமடைவார். குணமடைந்த பின், இவ்வுலக இன்பங்களையும், நீண்ட ஆயுளையும் பெற்று இன்புறுவார்.

அதுபோல், தீயொழுக்கம் பழியையும் பாவத்தையும் துன்பத்தையும் தரும் என அஞ்சி, தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடும் மனத்தை நன்னெறிப் பயிற்சிகளினால் தடுத்து நிறத்துவோருக்கு, வாழ்க்கை துன்பமாகத்தான் தோன்றும். அழுகை வரும், கண்களில் கண்ணீர் பெருகும், வேதனையும் துன்பமும் உள்ளத்தை வருத்தும்.

அறவழி, கடினமான பாதையாகத் தோன்றும். புலம்பிக் கொண்டு, கண்ணீரும் கம்பலையுமாய் அறவழியில் நடப்பார்கள். ஆனால், அறத்திற்காக இவர்கள் மேற்கொண்ட போராட்டம் தன் இன்பப் பலனைத் தராமல் போகாது. அது பழுத்துத் தன் பலனைத் தரும்போது இன்பமும் பெருமையும் புகழும் பெறுவார்கள்.

மனந்தளராமல் நன்னெறிகளுக்காக இவர்கள் போராடியதால், தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடும் மனம், படிப்படியாக அவற்றைக் கைவிட்டு, நன்னெறிகளில் உறுதியாக நிற்கும். இப்போது மனம் நன்னெறிகளில் மகிழ்ந்து, இன்புற்று, நல்லொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடும்.

இப்போது இவர்கள் இடைப் பருவத்தையோ அல்லது முதுமைப்பருவத்தையோ எட்டியிருப்பார்கள். இப்போது இவர்களுக்கு அறவழி, வேதனையும் துயரமும் தரும் பாதையாகத் தோன்றாது. மாறாக அவ்வழி இன்பமும், மகிழ்ச்சியும் தருவதாகவும், பெருமையும், புகழும் தருவதாகவும் தோன்றும்.

இளமையில் அறத்திற்காகப் போராடிய இவர்கள், முதுமை வந்த காலத்தில், பெருமையும், புகழும் பெற்றுச் சுகமடைவர்.

ஆகவே, இத்தகையோர், இளமையில் துன்புற்ற போதிலும், முதுமையில் புகழடைவார்கள். மரண பயம் இவர்களை வருத்தாது. மரணம் வந்த போது இவர்கள் அஞ்சிப் பிதற்றிப் புலம்புவதில்லை. அச்சமில்லாமல், குழப்பமில்லாமல், அமைதியாக இறப்பார்கள். அடுத்த உலகில் நல்ல கதிக்குப் போவார்கள்.

**10**

## இளமையிலும், முதுமையிலும், அடுத்த உலகிலும் துன்புறுவோர்

சிலருக்குத் தீய சுபாவம் இருக்கும். இவர்களின் உள்ளம் தீமையை நாடும். பாவத்தில் உள்ளம் மகிழ்ந்து களிப்புறும். தீமையையும், தீயதையும் கண்டு மகிழ்வார்கள். இவ்வகையான மக்களுக்குப் பாவம் தேன் போல் இனிக்கும்.

நீரானது மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி ஓடுவதுபோல், தீய சுபாவமுடைய இவர்களுடைய மனம் பாவத்தில் களிப்புற்று, பாவங்களில் இன்பங்களை நாடும்; இலாபத்தை நாடும். தீமையிலும், தீயனவற்றிலும் மகிழும் இவர்கள், செய்யத்தகாத பாவம் ஏதுமில்லை. ஆணவமும், அகந்தையும், கர்வமும் கொண்டு, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சாமல், துஷ்ட செயல்களைச் செய்து செருக்கித் திரிவார்கள்.

ஓநாய் வெள்ளாட்டுக் குட்டியை வம்புக்கிழுத்துக் கொன்றது போல், தன் சுகத்தை நாடி, தன்னைப் போல் சுகத்தை நாடும் பிற உயிர்களை வருத்தித் துன்புறுத்துவார்கள்.

ஓர் ஆட்டுக் குட்டி, காட்டில் நன்றாக மேய்ந்துவிட்டு, அருகில் இருந்த ஓர் ஓடையில் நீரைக் குடித்துக் கொண்டிருந்தது.

அப்போது அவ்வழியே இரை தேடி வந்தது ஓர் ஓநாய். அன்று அதற்கு இரை ஏதும் கிடைக்கவில்லை. பசியோடு ஓடி வந்த ஓநாய் ஓடையைப் பார்த்ததும் தண்ணீரையவது குடிக்கலாம் என்று எண்ணி, ஓடைக்குச் சென்று தண்ணீர் குடித்தது.

ஓடையின் கீழ்ப் பகுதியில், ஓர் ஆட்டுக் குட்டி தண்ணீர் குடித்துக் கொண்டிருப்பதை ஓநாய் கண்டது. ஆட்டுக் குட்டியைக்

கண்ட ஓநாய், இரை கிடைத்து விட்டது என்று எண்ணிக் கொண்டு, "ஏ ஆட்டுக் குட்டியே, என்று அதட்டியது. ஆட்டுக்குட்டி பயத்தினால் நடுங்கியது.

"தண்ணீரை ஏன் கலக்கி விடுகிறாய்?" என்று ஓநாய் கேட்டது.

"ஓடையில் தண்ணீர் தங்கள் பக்கம் இருந்து தானே இப்பக்கம் வருகிறது. தாங்கள் குடித்து எஞ்சிய தண்ணீரைத் தானே நான் குடிக்கிறேன்," என்று ஆட்டுக்குட்டி பணிவோடு கூறியது.

"அது இருக்கட்டும்; கடந்த ஆண்டு என்னை ஏன் திட்டினாய்?" என்று அதட்டியது ஓநாய்.

"அப்போது நான் பிறக்கவே இல்லையே, நான் பிறந்து இன்னும் ஆறு மாதங்கள் கூட ஆகவில்லையே" என்றது ஆட்டுக்குட்டி.

"நீ திட்டாவிட்டால், உன் தாய் திட்டியிருப்பாள்; அல்லது உன் தகப்பன் திட்டியிருக்கலாம்" என்று முறைத்தது ஓநாய்.

"என் தாயும் தகப்பனும் யாருக்குமே தீங்கு நினைக்க மாட்டார்களே!" என்றது ஆட்டுக் குட்டி.

"உன் பாட்டன், பாட்டி திட்டியிருக்கலாம். அதற்கு நீதான் பலி," என்று கூறிக் கொண்டே ஆட்டுக் குட்டியின் மீது பாய்ந்து கொன்று தின்றது ஓநாய்.

ஆட்டுக் குட்டி நியாயத்தைச் கூறிய போதிலும், ஓநாய் அதை ஏற்காமல், ஆட்டுக் குட்டியைக் கொன்று தின்றது. அது போல் தீய சுபாவம் உள்ளவர்கள் அக்ரமம் செய்யத் துணிந்துவிட்டால், யார் என்ன நியாயம் சொன்னாலும், ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, தங்களின் அடாத செயல் நியாயமானதே என்று சாதிப்பார்கள்.

பள்ளமான நிலத்தில் நீர் தேங்கி நிற்பது போல், தீய சுபாவமுள்ள இவர்களின் உள்ளத்தில் பாவங்கள் நிறைந்திருக்கும்.

இத்தகையோருக்கு அறத்தில் சிறிதும் நம்பிக்கை இருக்காது. அறத்தையும், நன்னெறி ஒழுக்க நெறிகளையும் அலட்சியப் படுத்துவார்கள்; உதாசீனப் படுத்துவார்கள், கேலி செய்வார்கள், பழித்துப் பேசுவார்கள், வெறுப்பார்கள். சட்ட விதிகளையும், நீதி நெறிகளையும், அலட்சியப் படுத்தி, உதாசீனம் செய்வார்கள். அடாத செயல்களைச் செய்வார்கள். ஏதாவது ஒரு காரணத்தைக் காட்டி, தங்களின் அடாத செயல் நியாயமானதே என்று சாதிப்பார்கள்.

நன்னெறிகளில் நம்பிக்கை இல்லாத இவர்கள், பாவமுள்ள இடத்தில் பாவமின்மையைக் காண்பார்கள், பாவமில்லாத இடத்தில் பாவத்தைக் காண்பார்கள்; குற்றமுள்ள இடத்தில் குற்றமின்மையைக் காண்பார்கள், குற்றமில்லாத இடத்தில் குற்றத்தைக் காண்பார்கள்; வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரியோரை அலட்சியப் படுத்தி உதாசீனப் படுத்துவார்கள். வணக்கத்திற்கும் மரியாதைக்கும் தகுதியற்றோரை வணங்கி மரியாதை செய்வார்கள்.

தீமையிலும், தீயனவற்றிலும் மகிழும் இவர்களின் குணமும் கொள்கைகளும்; நோக்கமும் குறிக்கோள்களும் விரும்பத் தகாததாகவும், வெறுக்கத் தக்கதாகவும், துன்பம் தருவதாகவும்தான் இருக்கும்.

இவர்களுடைய எண்ணங்களும், சொற்களும் செயல்களும் விரும்பத் தகாததாகவும், வெறுக்கத் தக்கதாகவும், துன்பம் தருவதாகவும்தான் இருக்கும்.

நல்லோரையும், தீயோரையும் அவர்களின் செயல்களாளேயே அறியலாம். நல்லோர் தமக்கும், பிறருக்கும் துன்பம் தரும் தீய செயல்களைச் செய்ய அஞ்சுவர்; பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சுவர்; தகாத செயல்களைச் செய்ய நாணுவர்.

ஆனால், தீயோரோ, தம் சுகத்தை நாடி, பிற உயிர்களுக்குத் துன்பம் செய்ய அஞ்சார். பாவத்தற்கு அஞ்சார். பழிக்கு அஞ்சார். தகாத செயல்களைச் செய்ய நாணார். நாணமில்லாத இவர்கள், அறத்தைப் பழித்து, இழிந்த செயல்களைச் செய்து செருக்கித் திரிவார்கள்.

இத்தகைய ஆண் - பெண் இரு பாலாருக்கும் அறத்திலும், பக்தியிலும் நாட்டமிருக்காது. இளமையில் கருத்துடன் கல்வியும்

தொழிலும் கலைகளும் கற்பதில்லை. நீதி- நெறிகளிலும் நேர்மையான உழைப்பிலும் நம்பிக்கை இருக்காது. இவர்களிடம் பணிவும் வணக்கமும் தன்னடக்கமும் இருக்காது.

தீமையில் மகிழும் இவர்களிடம் ஆணவமும், அகந்தையும், கர்வமும், தற்பெருமையும் இருக்கும். உள்ளத்தில் சினமும் பகையும் பொறாமையும் சூதும் கபடமும் வஞ்சனையும் இருக்கும். வாலிபச் பெருமையில் நீதி - நெறிகளை வெறுத்து, சட்டவிதிகளை அலட்சியப் படுத்தி, பழிபாவங்களுக்கு அஞ்சாமல், பாவச் செயல்களைச் செய்து செருக்கித் திரிவார்கள். தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடுவார்கள். பாவச் செயல்களில் பொருளை ஈட்டுவார்கள்.

மது எங்கே, மாது எங்கே, பாட்டு எங்கே, நடனம் எங்கே கச்சேரி எங்கே, சந்தை எங்கே எனக் கேளிக்கைகளில் இன்பங்களை நாடி அலைவார்கள். மது அருந்துவதிலும், புகை பிடிப்பதிலும், போதைப் பொருள்களை உப்யோகிப்பதிலும், சூதாட்டங்களிலும், பகட்டிலும், ஆடம்பரத்திலும், இன்பங்களை நாடுவார்கள்.

நெறிதவறி ஒழுக்கமில்லாமல், தகாத முறையில் காம இன்பங்களை நாடுவார்கள்.

நாவடக்கமில்லாமல், பொய்யும், புறமும், கடுஞ்சொற்களையும், வெறுக்கும் சொற்களையும், பயனற்ற சொற்களையும், பிறர் மனம் நோகும் சொற்களையும் பேசுவார்கள்.

பொய்யும் களவும் சூதும் வஞ்சனையும் செய்து பொருள் தேடுவார்கள். பாவச் செயல்களின் வழி பொருள் தேடுவதை கெட்டிக்காரத்தனம் என்றும், சாமர்த்தியம் என்றும் கருதுவார்கள். பொருள்களைக் கடத்தல் செய்தும், போதைப் பொருள்களை விநியோகித்தும் பொருள் தேடுவார்கள். கையில் ஆயுதம் ஏந்திக் கொள்ளையிடுவார்கள்.

சூழ்ச்சியாலும் கபடத்தாலும் வஞ்சனையாலும் பலாத்காரத் தாலும் பெண்களை விபசாரத்தில் ஈடுபடுத்திப் பொருள் தேடுவார்கள்.

தன் சுகத்தை நாடி தன்னைப் போல் சுகத்தை நாடும் பிற உயிர்களை வருத்தித் துன்புறுத்துவார்கள்.

பிறரை மிரட்டிப் பயமுறுத்தி, வன்செயல்களாலும், பலாத்காரத்தாலும் தம் காரியத்தைச் சாதிப்பார்கள்.

தன் லாபத்திற்காகக் குற்றமற்ற நிரபராதிகளையும் அப்பாவிகளையும் எளியோரையும் வருத்தித் துன்புறுத்தித் தண்டிப்பார்கள்.

உள்ளத்தில் பகை கொண்டு, கையில் ஆயுதம் ஏந்தி, பிறர் உடலிலிருந்து இரத்தத்தைச் சிந்த வைப்பார்கள்; கொலை செய்வார்கள்.

தீமையிலும், தீயனவற்றிலும் மகிழும் இவர்கள், பிறருக்கும் தவறான ஆலோசனையைக் கூறுவார்கள். ஆசை மொழிகளைப் பேசி, குற்றச் செயல்களைச் செய்யத் தூண்டுவார்கள்.

உள்ளத்தில் பகைமை கொண்டு, பொய் குற்றங்களைச் சாட்டி வம்பு வளர்ப்பார்கள். சண்டையிடுவார்கள். சண்டை சச்சரவுகளில் மகிழ்ந்து பூரிப்படைவார்கள்.

நன்னெறிகளிலும், நீதி நெறிகளிலும் நம்பிக்கையில்லாத இவர்கள், நீதி நெறிகளுக்குக் கட்டுப்பட்டு, ஒழுக்க விதிகளின்படி ஒழுகும் நல்லோரைப் பகைவர்களாகக் கருதுவார்கள்.

நல்லோரையும், நல்லோர் கூறும் அறிவுரைகளையும் வெறுப்பார்கள். நன்னெறிகளிலும், நீதி நெறிகளிலும், நம்பிக்கை இல்லாத இவர்களுக்கு அறிவுரை கூறினால் உதாசீனப் படுத்துவார்கள், அலட்சியப் படுத்துவார்கள், சினம் கொள்வார்கள், பகைமை பாராட்டுவார்கள், சிடுசிடுவென முகத்தில் வெறுப்பைக் காட்டுவார்கள. குற்றங்களைக் கண்டித்து, அறிவுரை கூறுவோரை பகைவர்களாகக் கருதி வெறுப்பார்கள்.

இனம் இனத்தோடு சேரும் என்பதால், பாவத்தில் நாட்டமுள்ள இவர்கள், தங்களைப்போல் தீமையிலும், தீயனவற்றிலும் மகிழும் துஷ்டர்களுடன் நட்பும் விசுவாசமும் கொள்வார்கள். பாவச் செயல்களைச் செய்யும் துஷ்டர்களை அறிவாளிகள் என்றும், கெட்டிக்காரர்கள் என்றும், திறமைசாலிகள் என்றும், சாமர்த்தியக் காரர்கள் என்றும், தைரிய சாலிகள் என்றும் கருதி, துஷ்டர்களையும், துஷ்டச் செயல்களையும் போற்றிப் புகழ்ந்து பூரிப்படைவார்கள்.

தீமைகளிலும் தீயனவற்றிலும் மகிழ்ந்து, சட்ட விதிகளையும், நீதி நெறிகளையும் அலட்சியப் படுத்தி, பாவச் செயல்களைச் செய்யும் இவர்களுக்கு, வாழ்க்கை துன்பமாகவே இருக்கும். பகையும் பழியும் பாவமும் அச்சமும் குற்றச்சாட்டுகளும் தண்டனையும் இவர்களை வருத்தித் துன்புறுத்தும்.

எவ்வகையான துன்பங்கள் இத்தகையோரை வருத்தும்?

உலகம் இவர்களைத் துஷ்டர்கள் என்றும், அரக்கர்கள் என்றும், மூர்க்கர்கள் என்றும், பாவிகள் என்றும் தூற்றி வெறுக்கும். உலகம் "இவர்களைக் காண்பதே துன்பம்" என இவர்களை வெறுத்து ஒதுக்கும்.

இவர்களின் சொல்லில் வீரியம் இருந்த போதிலும், நடையில் ஆணவமும், அகந்தையும், கர்வமும் இருந்த போதிலும் உள்ளத்தில் இவர்களுக்கு அச்சமும் இருக்கும். உள்ளத்தில் பாவமுடைய இவர்கள், மக்கள் மத்தியில் நடமாட அஞ்சுவார்கள். காண்பவரையெல்லாம் பகைவர்களாகக் கருதித் தமக்குத் தீங்கு ஏதும் செய்து விடுவார்களோ என அஞ்சுவார்கள். பழிக்கும் பகைக்கும் குற்றச்சாட்டுகளுக்கும் தண்டனைக்கும் அஞ்சி மக்களிடமிருந்து விலகி ஒதுங்கி மறைந்து வாழ்வார்கள்.

எங்கெல்லாம் மக்கள் கூடுகிறார்களோ அங்கெல்லாம் போக அஞ்சுவார்கள். அப்படியே போனாலும், அஞ்சி அஞ்சி மனக்குழப்பத்தோடு செல்வார்கள்.

எங்காவது சிலர் கூடிப் பேசுவதைக் கண்டால், இவர்கள் உள்ளத்தில் அச்சம் எழும். "நம்மைப் பற்றிப் பேசுகிறார்களோ, நம் குற்றங்களை அறிவார்களோ, நமக்குத் தீங்கிழைக்கத் திட்டமிடுகிறார்களோ," என எண்ணிக் கலக்கமடைவார்கள்.

இவர்கள் அஞ்சி, அஞ்சி உறங்குவார்கள். உறக்கத்தில் பயங்கரக் கனவுகள் இவர்களை வருத்தித் துன்புறுத்தும். இரவில் படுக்கையில் படுத்திருக்கும் போது, ஏதாவது ஆரவாரம் ஏற்பட்டாலும், எவராவது நடந்து செல்லும் ஓசையைக் கேட்டாலும் நம்மை அதிகாரிகள் கைது செய்ய வருகிறார்களோ, பகைவர்கள் வருகிறார்களோ," என எண்ணி அஞ்சி நடுங்குவார்கள்.

சட்ட விதிகளையும், நீதி நெறிகளையும் அலட்சியப் படுத்தி, பாவச் செயல்களைச் செய்யும் இவர்கள், அதிகாரிகளைக் கண்டு அஞ்சி நடுங்குவார்கள். இவர்கள் வீட்டில் இருக்கும் போதோ, அல்லது வீதிகளில் செல்லும்போதோ, அல்லது நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போதோ, அதிகாரிகளைக் கண்டால், "நம்மை இவர்கள் கைது செய்து கொண்டு செல்ல வருகிறார்களோ" என அஞ்சி நடுங்கி ஓடி மறைவார்கள்.

குற்றங்கள் செய்வோரை அதிகாரிகள் கைது செய்து, நீதி மன்றத்தில் நிறுத்தித் தண்டிக்கப் படுவதைக் காணும்போது, "நம் குற்றங்களை அதிகாரிகள் அறிந்தால், நம்மையும் இதுபோல் கைது செய்து, நீதிமன்றத்தில் நிறுத்தித் தண்டனைக்கு உட்படுத்துவார்களே" என அஞ்சி, அதிகாரிகளிடமிருந்து மறைந்து வாழ்வார்கள்.

இவர்களின் குற்றங்களை அறியும்போது, அதிகாரிகள் இவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, கைது செய்து, நீதிமன்றத்தில் நிறுத்தி, கடுந்தண்டனைக்கு உட்படுத்துவார்கள்.

இவர்களின் பகைவர்கள், சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து இருந்து, இவர்களைப் பழி வாங்குவார்கள். இவர்களின் மீது பயங்கரக் குற்றச் சாட்டுகளைச் சுமத்துவார்கள். இவர்களின் பொருள்களை அபகரிப்பார்கள். இவர்களின் மனைவி மக்களுக்குத் துன்பங்களை ஏற்படுத்துவார்கள். இவர்களைத் தண்டித்துத் துன்புறுத்துவார்கள். இவர்களைக் கொலையும் செய்யத் தயங்கமாட்டார்கள்.

அன்பும் அறமும் இல்லாத இவர்களின் இல்லற வாழ்க்கை துன்ப மயமாகத்தான் இருக்கும். அறத்திலும், நன்னெறி ஒழுக்கத்திலும் நாட்டமில்லாத இவர்களின் இல்லற வாழ்க்கை, மிருகங்கள் ஒன்றோடொன்று இணைந்த பின், ஒன்றை ஒன்று கடித்துக் கொள்வது போல்தான் இருக்கும்.

இளமையில் தீயொழுக்கங்களில் புலன் இன்பங்களை நாடி உடலை வருத்திய இவர்களை, முதுமை வந்த காலத்தில், கடும்பிணிகள் வருத்தித் துன்புறுத்தும்.

இளமையில் நல்வழியில் உழைத்துப் பொருளைத் தேடி சேமிக்காத இவர்கள், முதுமை வந்த காலத்தில் வறுமையில் வாடி, ஏங்கிப் பரிதவிப்பார்கள்.

இத்தகையோரின் துன்பத்தைக் கண்டு உலகம் பரிதாபப்படாது. "பாவி, பாவங்களைச் செய்தான், இவன் பாவங்கள் பழுத்து இவனை வருத்துகின்றன. அன்று இவன் பிறருக்குத் துன்பம் செய்து மகிழ்ந்தான். இன்று அத்துன்பங்கள் இவனை வருத்துகின்றன," எனப் பேசி இவன் மேல் பரிதாபப்பட மாட்டார்கள்.

ஆகவே, தீமையிலும், தீயனவற்றிலும் மகிழ்ந்து, சட்ட விதிகளையும், நிதி நெறிகளையும் அலட்சியப்படுத்தி, பாவச் செயல்களைச் செய்வோர், இளமையிலும் துன்பப் படுவார்கள், வாலிபப் பருவத்திலும் துன்பப் படுவார்கள், முதுமையிலும் துன்பப் படுவார்கள்.

இத்தகையோர் மரணத்திற்கு முன் அஞ்சி நடுங்குவார்கள்" அடுத்த உலகில் என் கதி என்னவோ எனத் தாம் செய்த பாவங்களை எண்ணி எண்ணிப் பரிதவிப்பார்கள், புலம்பிப் பிதற்றுவார்கள்.

இவ்வுலக வாழ்க்கை முடியும் தறுவாயில், இவர்களின் பாவம், சுமக்க முடியாத பெரும் சுமைபோல் இவர்கள் உள்ளத்தை அழுத்தும். அடுத்த உலகில் கடுந்தண்டனை காத்திருக்கின்றது என்ற அச்சம் இவர்களை வருத்தித் துன்புறுத்தும்.

இத்தகையோருக்கு மரணம் அமைதியாக வருவதில்லை; இவர்கள் சாந்தமாக இறப்பதுமில்லை. மரணம் வரும்போது, விபரிக்க இயலாத அச்சம் இவர்களின் உள்ளத்தை பற்றிக் கொள்ளும். உள்ளம் நடுங்கி, நாக்குளறி, அலறித் துடிதுடித்து, மனக்குழப்பத்தோடு இறப்பார்கள். அடுத்த உலகில் மிருகமாகவோ பேயாகவோ நரகத்திலோ பிறந்து அல்லற்படுவார்கள்.

இத்தகைய மக்களைப் பற்றி பகவான் புத்தர் இவ்வாறு கூறியுள்ளார்:

*தீய கருமத்தைச் செய்தவன் உலக வாழ்வில் வருந்துகிறான் அடுத்த உலகிலும் வருந்துகிறான்; ஈருலகிலும் அவனுக்குத் துயரமே. "நான் செய்த பாவம்" என்று அவன் வருந்துகிறான். நரகத்திலும் அவன் அதிகமாய் வேதனைப்படுகிறான்.*

இத்தகையோர், முற்பிறவிகளில் தர்ம உபதேசங்களையும்,

நன்னெறிகளையும் அலட்சியப் படுத்தி, உதாசீனப் படுத்தியதாலும்; மனத்தால் தீயனவற்றை எண்ணி, சொல்லால் தீயனவற்றைப் பேசி, செயலால் தீய செயல்களைச் செய்ததாலும், இப்பிறப்பில் இவர்களின் மனம் தீமையிலும் தீயனவற்றிலும் மகிழ்ந்து பாவச் செயல்களில் இன்பங்களை நாடியது.

மனம் தீமையில் மகிழ்ந்து பாவத்தை நாடிய போதிலும், இவர்கள் தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி, தீமையை நாடும் மனத்தைத் தடுத்து நிறுத்தி, நன்னெறிகளுக்காகப் போராடினார்கள் என்றால், படிப்படியாக இவர்களின் தீய சுபாவம் இவர்களை விட்டு விலகி, மனம் நன்னெறிகளை நாடி, நல்வழியில் சென்று அதிக சுகமளிக்கும்.

ஆகவே, இத்தகையோர், மானிடப் பிறப்பை, கிடைத்ததற்கரிய பெரும் பாக்கியமாகக் கருதி, " நம் துன்பங்களுக்கெல்லாம் காரணம் பாவம்" என்பதை அறிந்து "பாவங்களை விடாதவரை துன்பம் நம்மைத் தொடர்ந்து வரும்" என்பதையும் அறிந்து, நல்லோரை நாடி, நல்லுரைகளைக் கேட்டு, பழிக்கும் பாவத்திற்கும் அஞ்சி, தீமையில் மகிழ்ந்து பாவத்தை நாடும் மனத்தை, நன்னெறிப் பயிற்சிகளினால் தடுத்து நிறுத்தி, நன்னெறிகளில் செலுத்த வேண்டும்.

தீமையில் மகிழ்ந்து தீயனவற்றை நாடும் மனத்தைத் தடுத்து நிறுத்துவது சிரமமாகத்தான் இருக்கும். அது சிரமமாக இருந்த போதிலும், பாவம் துன்பத்தையே தரும் என அறிந்து, மனம் தளர்ச்சியடையாமல் நன்னெறிகளுக்காகப் போராடினார்களென்றால், பாவத்திலிருந்து விடுபடலாம்.

தர்ம உபதேசங்களும், நல்லோரின் நட்பும், நல்லோரின் அறிவுரைகளும், பக்தியும், பிரார்த்தனைகளும் இவர்களுக்குப் பெரிதும் உதவும்.

11

## முதுமையும் மரண பயமும்

இளமையில், வாலிபப் பெருமையில், அறத்தையும், நல்லொழுக்க நெறிகளையும், அலட்சியப் படுத்தி, தீயொழுக்கங்களில் வாழ்க்கை இன்பங்களை நாடி, பாவ கருமங்களைச் செய்தவனும்; அடுத்த உலகிலும், தர்ம உபதேசத்திலும் நம்பிக்கையில்லாமல், தவறான கொள்கைகளைப் பின்பற்றி, பாவ கருமங்களைச் செய்தவனும்; இவர்கள் இரு சாராரும் முதுமை வந்த காலத்தில், மரணத்தை எண்ணி அஞ்சுவார்கள்.

சூரியன் அஸ்தமிக்கும்போது, ஓர் உயர்ந்த பாறையின் நிழல் பூமியில் நீண்டு விழும். அது போல், இவ்வுலக வாழ்க்கை முடியும் தறுவாயில், இளமையில் செய்த பாவங்களின் பிரதிபிம்பம், சுமக்க முடியாத சுமைபோல், உள்ளத்தை வருத்தும். முதுமை வந்த காலத்தில், வாலிபச் செருக்கில் செய்த பாவங்களை எண்ணி, "அடுத்த உலகில் நம் கதி என்னவோ," என மரணத்தை நினைத்து அஞ்சுவார்கள். தம் பழமையை எண்ணி எண்ணிப் பரிதவிப்பார்கள்.

இவர்களில் சிலர், முதுமை வந்த காலத்தில், மரணத்திற்கு அஞ்சி, அடுத்த உலகில் தம் கதி என்னவோ என ஐயுற்றுப் பக்தியை நாடுவார்கள். சிலர் தவறான போதனைகளில் அடைக்கலம் தேடுவார்கள்; சிலர் யாத்திரைகளை மேற்கொண்டு, புண்ணிய தலங்களில் அடைக்கலம் தேடுவார்கள். சிலர் மலைகளிலும், வனங்களிலும் அடைக்கலம் தேடுவார்கள். சிலர் தம் பாவங்களைக் கழுவ எண்ணி, சடங்குகள் பலவற்றைச் செய்வார்கள்.

பயங்கொண்ட இவர்கள் இவ்வாறெல்லாம் அடைக்கலம் தேடிய போதிலும், மரண பயத்திலிருந்து விடுபடுவதுமில்லை; சாந்தி பெறுவதுமில்லை. ஏன்?

பாவ கருமங்கள் பழுத்து துன்பப் பலனைத் தரும்போது, அதன்

பிடியிலிருந்து தப்ப முடியாது என்கிறார் பகவான் புத்தர்.

> ***“இரகசியமாகவோ, பலர் அறியவோ, இப்போது (இளமையில்) நீ தீய செயலைச் செய்தாய் என்றால், பின்னால் (முதுமை வந்த காலத்தில்) அதனிடமிருந்து தப்பிக்க முயன்றாலும், நிச்சயமாக நீ துன்பப்படுவாய்."***

> ***"மனிதன் தன் பாவ கருமத்தின் பிடியிலிருந்து தப்பவே முடியாது; தப்பித்துக் கொள்ளும் இடம் பரந்த வானிலும் இல்லை, ஆழ்ந்த கடலிலும் இல்லை, மலையின் குகைகளிலும் இல்லை.”***

பயங்கொண்ட இவர்கள் அடைக்கலம் தேடிய போதிலும், இவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. இளமையில் அறத்தையும், தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும் இகழ்ந்து பாவ கருமங்களைச் செய்துள்ளதால், இவர்களின் உள்ளத்தில் குழப்பமும், சந்தேகமும், அவநம்பிக்கையும் எழுந்து, மரண பயத்தை அதிகரிக்குமே ஒழிய, மனம் சாந்தி அடைவதில்லை. இளமையில், "எனக்கும் இங்கே முடிவு உண்டு" என்பதை மறந்து, பாவ கருமங்களைச் செய்துள்ள இவர்கள், முதுமையில் மரணத்திற்கு அஞ்சி, தம் பழமையை எண்ணி எண்ணிப் பரிதவிப்பார்கள். இவர்களுக்குப் பாதுகாப்பு ஏதுமில்லை; அடைக்கலம் ஏதுமில்லை.

அறமும், பக்தியும், புண்ணிய கருமங்களுமே சிறந்த அடைக்கலம். இந்த அடைக்கலங்களே, நல்ல பாதுகாப்பு. இந்த அடைக்கலங்களினால் வேதனைகளிலிருந்து விடுபடலாம். இச்செல்வங்களைத் தேடியுள்ளோர், பாதுகாப்பைத் தேடிக் கொண்டோர் ஆவர். இவர்களே அடுத்த உலகிற்குப் பொருள் தேடிக் கொண்டோர் ஆவர். இவை மரண பயத்தைப் போக்கி, மனத்திற்குச் சாந்தியளித்து, மரண வாயிலில் துணை நின்று, அடுத்த உலகில் நல்ல கதிக்குக் கொண்டு செல்லும்.

அறமும் பக்தியும் புண்ணிய கருமங்களும் முதுமை வந்த காலத்தில், வாழ்க்கை முடியும் தறுவாயில், உடனே, எடுத்த எடுப்பிலேயே பெறக்கூடியவை அல்ல. இவை யாவற்றையும், இளமைப் பருவத்திலிருந்தே, தொடர்ச்சியான, இடைவிடாத முயற்சியினால் படிப்படியாகப் பெறக்கூடியவை.

அறச் செல்வத்தை, முதுமை வந்த காலத்தில், மரணத்திற்கு அஞ்சி, எடுத்த எடுப்பில், உடனே பெற்றுவிட முடியாது. பின்னால் பார்த்துக் கொள்ளலாம், முதுமை வந்த காலத்தில் அறத்தைப் பற்றிச் சிந்திப்போம் என்று எண்ணாது, இளமையிலிருந்தே நன்னெறிப் பயிற்சிகளை மேற்கொள்வோரே, இச்செல்வத்தைப் பெறுவார்கள்.

பக்திச் செல்வத்தை, முதுமை வந்த காலத்தில், மரணத்திற்கு அஞ்சி, எடுத்த எடுப்பில் உடனே பெற்றுவிட முடியாது. பின்னால் பார்த்துக் கொள்ளலாம், முதுமை வந்த காலத்தில் பக்தியைப் பற்றிச் சிந்திப்போம் என்று எண்ணாது. இளமையிலிருந்தே தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, உள்ளத்தில் பக்தியை வளர்ப்போரே இச்செல்வத்தைப் பெறுவார்கள்.

புண்ணியச் செல்வத்தை, முதுமை வந்த காலத்தில் மரணத்திற்கு அஞ்சி, எடுத்த எடுப்பில் உடனே பெற்றுவிட முடியாது. பின்னால் பார்த்துக் கொள்ளலாம், முதுமை வந்த காலத்தில் புண்ணியத்தைப் பற்றிச் சிந்திப்போம் என்று எண்ணாது, இளமையிலிருந்தே உள்ளத்தில் அன்பு கொண்டு, நற்செயல்களைச செய்வோரே, இச்செல்வத்தைப் பெறுவார்கள்.

ஆகவே அறிவுடையோர், இளமையிலிருந்தே அறநெறிகளில் ஒழுக வேண்டும்; தர்ம உபதேசங்களை நம்பும் மனத்துடன் கேட்டு, உள்ளத்தில் பக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும்; உள்ளத்தில் அன்பு கொண்டு, நற்செயல்கள் செய்ய வேண்டும்.

"எனக்கும் இங்கே முடிவு உண்டு; நானே என் செயல்களுக்கு வாரிசு; அடுத்த உலகிற்கு என்னோடு வருவது நான் செய்த புண்ணியமும் பாவமும் தான்," என உணர்ந்து, இளமையில் இருந்தே நல்வாழ்வு வாழ வேண்டும்.

இவ்வாறு வாழ்வோர், முதுமை வந்த காலத்தில் மரணத்தை எண்ணி, அஞ்சுவதில்லை. மாறாக, "நான் நல்வாழ்வு வாழ்ந்துள்ளேன்," எனத் தம் பழைமையை எண்ணி, மனச் சாந்தி அடைவார்கள்.

இவ்வகையான மக்கள், புண்ணியத் தலங்களுக்கு யாத்திரை மேற்கொண்டால், மனச் சாந்தி பெறுவார்கள். இவர்களிடம் அன்பும் அறமும் பக்தியும் புண்ணிய கருமங்களும் உண்டென்பதால், புண்ணியத் தலங்கள் இவர்களுக்கு அடைக்கலமும், பாதுகாப்பும் தந்து, மனச் சாந்தியைக் கொடுக்கும் புகலிடமாக விளங்கும்.

# 12

## தேவதூதர்கள்

*பகவான் புத்தர்*
*இப்படியும் ஓர் உபதேசம் செய்துள்ளார்:*

கதவுகளையுடைய இரு வீடுகளுக்கிடையே நிற்கும் பார்வையுள்ள ஒரு மனிதர், மக்கள் வீடுகளில் நுழைவதையும், வீடுகளிலிருந்து வெளியேறுவதையும், வீடுகளுக்கிடையே நடமாடுவதையும், ஒரு வீட்டிலிருந்து வெளியாகி அடுத்த வீட்டிற்குள் நுழைவதையும் தெளிவாகப் பார்க்க முடியும்.

அதுபோல், நான் என் ஞானப் பார்வையால், உயிர்கள் இறந்து, அவரவர் கரும பலனுக்கு ஏற்றவாறு, மீண்டும் எங்குப் பிறக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடியும்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும், பழித்து அலட்சியப் படுத்தாமல், சரியான கொள்கைகளைப் பின்பற்றி; எண்ணங்களாலும், சொற்களாலும் செயல்களாலும், நல்லொழுக்கத்தை மேற்கொண்டோர், நற்கரும பலனின் காரணமாக, உடலை விட்டு உயிர் பிரிந்த பின், தெய்வலோகங்களில் பிறப்பதை. நான் என் ஞானப் பார்வையால் பார்க்க முடியும்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும், பழித்து அலட்சியப் படுத்தாமல், சரியான கொள்கைகளைப் பின்பற்றி; எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் நல்லொழுக்கத்தை மேற்கொண்டோர், நற்கரும பலனின் காரணமாக, உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், மனிதர்களிடையே பிறப்பதை, நான் என் ஞானப் பார்வையால் பார்க்க முடியும்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும், பழித்து அலட்சியப்படுத்தி, தவறான கொள்கைகளைப் பின்பற்றி, எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் தீயொழுக்கத்தை மேற்கொண்டோர், உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், தீய கரும் பலனின் காரணமாக, ஆவிகள் உலகில் பிறப்பதை, நான் என் ஞானப் பார்வையால் பார்க்க முடியும்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும், பழித்து அலட்சியப்படுத்தி, தவறான கொள்கைகளைப் பின்பற்றி; எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் தீயொழுக்கத்தை மேற்கொண்டோர், உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், தீய கரும பலனின் காரணமாக, மிருக உலகில் பிறப்பதை, நான் என் ஞானப் பார்வையால் பார்க்க முடியும்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும், பழித்து அலட்சியப்படுத்தி, தவறான கொள்கைகளைப் பின்பற்றி; எண்ணங்களாலும், சொற்களாலும், செயல்களாலும் தீயொழுக்கத்தை மேற்கொண்டோர், உடலைவிட்டு உயிர் பிரிந்த பின், தீய கரும பலனின் காரணமாக, நரகத்தில் பிறப்பதை, நான் என் ஞானப் பார்வையால் பார்க்க முடியும்.

தர்ம உபதேசங்களையும், அடுத்த உலகையும், பழித்து அலட்சியப்படுத்தி, தவறான கொள்கைகளைப் பின்பற்றி; தீய எண்ணங்களை எண்ணி, தீய சொற்களைப் பேசி, தீய செயல்களைச் செய்து, நரகத்திற்குள் விழுபவனை நரகத்தின் காவலாளிகள் பிடித்து, எமதர்மராஜனின் முன் கொண்டு நிறுத்தி இவ்வாறு கூறுவார்கள்:

"ஐயா, இந்த மனிதன் தாய்க்கு மரியாதை செய்யவில்லை; தந்தைக்கு மரியாதை செய்யவில்லை; குடும்பத்தில் முதியோருக்கு மரியாதை செய்யவில்லை; மரியாதைக்குரியோருக்கு மரியாதை செய்யவில்லை, இந்த மனிதனை விசாரித்துத் தண்டனை வழங்குங்கள்.”

எமதர்மராஜா அந்த மனிதரை அணுக்கமாகக் கேள்விகள் கேட்டு விசாரித்து, குறுக்கு விசாரணைகளும் செய்த பின், அந்த மனிதனிடம் முதல் தேவ தூதன் சம்பந்தமாகக் கூறுவார்:

**எமதர்மராஜா**:

மானிடா, மனிதர்களிடையே தோன்றிய முதல் தேவ தூதனை நீ பார்த்ததில்லையா?

**மனிதன்**: ஐயா, நான் அவரைப் பார்த்ததில்லை.

**எமதர்மராஜா**:

என்ன! வயதான ஒரு பெண்ணையோ, ஆணையோ நீ பார்த்ததில்லையா? எழுபதோ, எண்பதோ, தொண்ணூறோ, நூறு வயதையோ எட்டிய ஒரு பெண்ணையோ, ஆணையோ நீ பார்த்ததில்லையா? இளமை மறைந்து, தோலில் சுருக்கங்கள் விழுந்து, பற்கள் உதிர்ந்து, முடி நரைத்து, உடல் வலிமை குன்றி, உடல் கூனிக்குறுகி, கை கால்களில் வலுவின்றி, கையில் கோலுடன் தள்ளாடி நடந்து செல்லும் ஒரு பெண்ணையோ, ஆணையோ நீ பார்த்ததில்லையா?

**மனிதன்**: நான் பார்த்துள்ளேன் ஐயா!

**எமதர்மராஜா**:

அறியும் வயதை அடந்துவிட்ட போதிலும், நீ இதை உணரவில்லையா? எனக்கும் முதுமை வரும்; நான் இன்னும் முதுமையைத் கடக்கவில்லை. நல்ல எண்ணங்களை எண்ணி, நல்ல சொற்களைப் பேசி, நற்செயல்களைச் செய்வோம்" என்பதை ஏன் உணரவில்லை?

**மனிதன்**: ஐயா, நான் இவற்றை உணரவில்லை. நான் இவற்றை அலட்சியப்படுத்திவிட்டேன்.

**எமதர்மராஜா**:

அலட்சியப் படுத்தியதன் காரணத்தினால், தீமையான எண்ணங்களை எண்ணி, தீமையான சொற்களைப் பேசி, தீமையான செயல்களைச் செய்தாய். உன் அலட்சியத்திற்கு ஒப்ப நரகத்தின் காவலாளிகள் உன்னைத் தண்டனைக்கு உட்படுத்துவார்கள்.

உன்னுடைய இந்தப் பாவச் செயல் உன்னுடையதே: இதைத் தாய் செய்யவில்லை; தந்தை செய்யவில்லை; சகோதரன் செய்யவில்லை; சகோதரி செய்யவில்லை; நண்பர்களோ அறிமுகமானவர்களோ செய்யவில்லை; உறவினர் செய்யவில்லை; துறவிகள் செய்யவில்லை. தேவகுமாரர்கள் செய்யவில்லை, இந்தப் பாவச் செயலை நீயே செய்துள்ளாய்;

அதன் பலனை நீயேதான் அனுபவிக்க வேண்டும்.

(ஆகவே இளமையில் பாவச் செயல்களளைச் செய்வோர், முதுமையடைந்தோரைக் காணும்போது, "உனக்கும் முதுமை வரும் "என எச்சரிக்கும் தூதர்களாகக் கருதி, பாவச் செயல்களை விட்டுவிட வேண்டும்.)

அடுத்து இரண்டாவது தேவ தூதன் சம்பந்தமாகக் கூறுவார்:

**எமதர்மராஜா**:
மனிதரிடையே தோன்றிய இரண்டாவது தேவ தூதனை நீ பார்த்ததில்லையா?

**மனிதன்**: ஐயா, அவரை நான் பார்த்ததில்லை.

**எமதர்மராஜா**:
என்ன! கடும் நோயினால் பீடிக்கப்பட்டு, படுத்த படுக்கையிலேயே மல-சலம் கழித்து, பிறர் உதவியால் படுத்துப், பிறர் உதவியால் எழுந்து, தாங்க முடியாத வேதனையால் துன்புற்ற ஒரு பெண்ணையோ, ஆணையோ நீ பார்த்த - தில்லையா?

**மனிதன்**: நான் பார்த்துள்ளேன் ஐயா!

**எமதர்மராஜா**:
அறியும் வயதை அடைந்துவிட்ட போதிலும், நீ இதை உணரவில்லையா? “எனக்கும் வியாதி வரும். நான் இன்னும் வியாதியைக் கடக்கவில்லை. மனத்தால் நல்ல எண்ணங்களை எண்ணி, சொல்லால் நல்ல சொற்களைப் பேசி, செயலால் நற்செயல்களைச் செய்வோம்" என்பதை ஏன் உணரவில்லை?

**மனிதன்**: ஐயா, நான் இதை உணரவில்லை. நான் இதை அலட்சியப்படுத்திவிட்டேன்.

**எமதர்மராஜா**:
அலட்சியப்படுத்தியதன் காரணத்தினால், தீமையான எண்ணங்களை எண்ணி, தீமையான சொற்களைப் பேசி, தீமையான செயல்களைச் செய்தாய், உன் அலட்சியத்திற்கு ஒப்ப, நரகத்தின் காவலாளிகள் உன்னைத் தண்டனைக்கு உட்படுத்துவார்கள்.

உன்னுடைய இந்த பாவச் செயல் உன்னுடயதே; இதைத் தாய் செய்யவில்லை; தந்தை செய்யில்லை; சகோதரன் செய்யவில்லை; சகோதரி செய்யவில்லை; நண்பர்களோ, அறிமுகமானவர்களோ செய்யவில்லை; உறவினர் செய்யவில்லை; துறவிகள் செய்யவில்லை; தேவகுமாரர்கள் செய்யவில்லை. இந்தப் பாவச் செயலை நீயே செய்துள்ளாய்; அதன் பலனை நீதான் அனுபவிக்க வேண்டும்.

(ஆகவே, இளமையில் பாவச் செயல்களைச் செய்வோர், கடும் நோயினால் துன்புறுவோரைக் காணும்போது; "உனக்கும் வியாதி வரும்" என எச்சரிக்கும் தூதர்களாகக் கருதி, பாவச் செயல்களை விட்டுவிட வேண்டும்.)

அடுத்து மூன்றாவது தேவ தூதன் சம்பந்தமாகக் கூறுவார்:

**எமதர்மராஜா**:
மனதரிடையே தோன்றிய மூன்றாவது தேவ தூதனை நீ பார்த்ததில்லையா?

**மனிதன்**: ஐயா, நான் அவரைப் பார்த்ததில்லை.

**எமதர்மராஜா**:
என்ன! பாவச் செயல்கள் செய்த ஒரு திருடனை காவல் துறையினர் கைது செய்து தண்டனைக்கு உட்படுத்தியதை நீ பார்க்கவில்லையா?

**மனிதன்**: நான் பார்த்துள்ளேன் ஐயா!

**எமதர்மராஜா**:
அறியும் வயதை அடைந்தும், பாவச் செயல்களைச் செய்வோரை இவ்வுலகிலேயே கடுந்தண்டனைக்கு உட்படுத்துவதை பார்த்தும், இது போல் அடுத்த உலகிலும் தண்டனை இருக்குமே! என்பதை நீ உணரவில்லையா?

இங்குத் தண்டனை உள்ளது போல், பாவச் செயல்களுக்கு அடுத்த உலகிலும் தண்டனை இருக்குமே! மனத்தால் நல்ல எண்ணங்களை எண்ணி, சொல்லால் நல்ல சொற்களைப் பேசி, நற்செயல்களைச் செய்வோம் என்பதை ஏன் உணரவில்லை?

**மனிதன்**: ஐயா, நான் இதை உணரவில்லை. நான் இதை அலட்சியப் படுத்திவிட்டேன்.

**எமதர்மராஜா**:

அலட்சியப்படுத்தியதன் காரணத்தினால், தீமையான எண்ணங்களை எண்ணி, தீமையான சொற்களைப் பேசி, தீமையான செயல்களைச் செய்தாய். உன் அலட்சியத்திற்கு ஒப்ப, நரகத்தின் காவலாளிகள் உன்னைத் தண்டனைக்கு உட்படுத்துவார்கள்.

உன்னுடைய இந்த பாவச் செயல் உன்னுடயதே; இதைத் தாய் செய்யவில்லை; தந்தை செய்யவில்லை; சகோதரன் செய்யவில்லை; சகோதரி செய்யவில்லை; நண்பர்களோ, அறிமுகமானவர்களோ செய்யவில்லை; உறவினர் செய்யவில்லை; துறவிகள் செய்யவில்லை; தேவகுமாரர்கள் செய்யவில்லை. இந்தப் பாவச் செயலை நீயே செய்துள்ளாய்; அதன் பலனை நீதான் அனுபவிக்க வேண்டும்.

(ஆகவே, இளமையில் பாவச் செயலைச் செய்வோர், அதிகாரிகள் பாவச் செயலைச் செய்தோரைக் கைது செய்து தண்டனைக்கு உட்படுத்துவதைக் காணும்போது "இதுபோல் அடுத்த உலகிலும் பாவச் செயல்களக்குத் தண்டனை உண்டு" என எச்சரிக்கும் தூதர்களாகக் கருதி, பாவச் செயல்களை விட்டுவிட வேண்டும்.)

அடுத்து, நான்காவது தேவ தூதன் சம்பந்தமாகக் கூறுவார்:

**எமதர்மராஜா**:

மனிதரிடையே தோன்றிய நான்காவது தேவ தூதனை நீ பார்த்ததில்லையா?

**மனிதன்**: ஐயா! நான் அவரைப் பார்த்ததில்லை.

**எமதர்ம ராஜா**:

என்ன! மனிதரிடையே மரணத்தை நீ பார்த்திலையா? ஒரு பெண்ணோ, ஆணோ இறந்து ஒன்றோ, இரண்டோ மூன்று நாட்களோ ஆன பின், உடல் உப்பி, நிறம் மாறி, அழுகியதை நீ பார்த்ததில்லையா?

**மனிதன்**: ஐயா, நான் அவரைப் பார்த்திருக்கிறேன்.

**எமதர்ம ராஜா**:

அறியும் வயதை அடைந்துவிட்ட போதிலும், நீ இதை உணரவில்லையா? "எனக்கும் மரணம் வரும்"  நான் இன்னும் மரணத்தைக் கடக்கவில்லை. எண்ணங்களால் நல்லதை எண்ணி, சொல்லால் நல்ல சொற்களைப்பேசி, நற்செயல்களைச் செய்வோம்" என்பதை ஏன் உணரவில்லை.

**மனிதன்**: ஐயா! நான் இதை உணரவில்லை. நான் இதை அலட்சியப் படுத்திவிட்டேன்.

**எமதர்மராஜா**:


அலட்சியப்படுத்தியதன் காரணத்தினால், தீமையான எண்ணங்களை எண்ணி, தீமையான சொற்களைப் பேசி, தீமையான செயல்களைச் செய்தாய். உன் அலட்சியத்திற்கு ஒப்ப, நரகத்தின் காவலாளிகள் உன்னைத் தண்டனைக்கு உட்படுத்துவார்கள்.

உன்னுடைய இந்த பாவச் செயல் உன்னுடயதே; இதைத் தாய் செய்யவில்லை; தந்தை செய்யவில்லை; சகோதரன் செய்யவில்லை; சகோதரி செய்யவில்லை; நண்பர்களோ, அறிமுகமானவர்களோ செய்யவில்லை; உறவினர் செய்யவில்லை; துறவிகள் செய்யவில்லை; தேவகுமாரர்கள் செய்யவில்லை. இந்தப் பாவச் செயலை நீயே செய்துள்ளாய்; அதன் பலனை நீதான் அனுபவிக்க வேண்டும்.

(ஆகவே இளமையில் பாவச் செயல்களைச் செய்வோர், ஒரு பெண்ணோ, ஆணோ இறப்பதைக் காணும்போது, "உனக்கும் மரணம் வரும் என எச்சரிக்கும் தூதர்களாகக் கருதி, பாவச் செயல்களை விட்டுவிட வேண்டும்.

எமதர்மராஜா அந்த மனிதனைக் கேள்விகள் கேட்டு, குறுக்கு விசாரணை செய்து, நான்கு தேவதூதர்களைப் பற்றியும் விளக்கிக் கூறிய பின், அமைதியானார். அதன் பின் நரகத்தின் காவலர்கள் அந்த மனிதனை நரகத்தின் தண்டனைக்கு உட்படுத்தினார்கள்.

தொடர்ந்து, பகவான் புத்தர். உயிர்கள் நரகத்தில் படும் துன்பங்களை விவரித்தபின் இப்படியும் கூறியுள்ளார்:



இவற்றையெல்லாம், மற்றத் துறவிகளிடமிருந்தோ, பிராமணர்களிடமிருந்தோ கேட்டு நான் உங்களுக்குச் சொல்லவில்லை. நான் பேசிய இவற்றையெல்லாம், நான் ஒருவரே அறிவேன். நானே பார்த்து, நானே அறிந்து, உங்களுக்கு அறிவிக்கின்றேன்.

தொடர்ந்து இப்படியும் கூறியுள்ளார்:

இளைஞர்கள், தேவதூதர்களால் எச்சரிக்கப்பட்ட போதிலும், முன் யோசனையில்லாமல், அலட்சியப்படுத்தி, உதாசீனப்படுத்தினார் என்றால், பாவிகள் பிறக்கும் இழிந்த நிலையில் பிறந்து, நீண்ட காலத்திற்குத் துன்புறுவார்கள்.

ஆகவே, அறிவுடையோர், தேவதூதர்களால் எச்சரிக்கப் பட்டபோது, அறநெறிகளை அலட்சியப்படுத்தி, உதாசீனம் செய்யக்கூடாது.

# <u>மற்ற வெளியீடுகள்</u>

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்